


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 13 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 01, 2022

# பொதுநலவாயநாடுகளின் மாநாடு – 2022

பொதுநலவாய தலைவர்களுடைய 26ஆவது மாநாடு 2022 யூன் 20ஆம் திகதியில் இருந்து 25ஆம் திகதிவரை கிழக்கு ஆபிரிக்காவில் இருக்கும் ருவாண்டா நாட்டின் தலைநகரான கிகாலியில் நடைபெற்றது. பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்களது கூட்டம் (Commonwealth Heads of Government Meeting) என்பதன் சுருக்கமான "CHOGM 2022" என இம் மாநாடு அழைக்கப்படுகிறது. “இணைத்தல் (Connecting), புதுமைப்படுத்துதல் (Innovating), மாற்றுதல் (Transforming) மூலம் ஒரு பொதுவான எதிர்காலத்தை வழங்குதல்” என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாக இருந்தது. ஜனநாயகம், வளர்ச்சி மற்றும் அமைதி போன்ற எல்லோருக்கும் பொதுவான இலக்குகளை அடைய 54 பொதுநலவாய நாடுநகளின் பன்முகத்தன்மையுடைய குடும்பங்களும் ஒன்றிணைந்து செயற்படும் நோக்கத்துடன் இக்கருப்பொருள் இம்மாநாட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

யூன் 25இல் பொதுநலவாயநாடுகளின் அரசாங்கத்தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாட முன்னர் பெண்கள், இளையோர், குடிசார் சமூகம் மற்றும் வணிக சமூகம் ஆகியோரின் கருத்து களைக் கேட்க நான்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பிரிட்டனின் இளவரசர் சார்ல்ஸ் பொதுநல வாயநாடுகளின் தலைவர்களுக்கு ஆற்றிய உரையில், பிரிட்டிஷ் ஆட்சியில் நடை பெற்ற அடிமைத்தனம் குறித்து ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார். மேலும், இந்த அமைப்பின் ஆரம்ப வரலாறு வலிமிகுந்த காலகட்டத்தில் இருந்ததை ஒப்புக்கொண்டார்.

பிரிட்டன் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள் 15ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டு களுக்கு இடையில் 10 மில்லியனுக்கு அதிகமான ஆபிரிக்க மக்களை அடிமைப் படுத்தியது மட்டுமல்லாமல் அவர்களை கரீபியன் மற்றும் அமெரிக்காவில் உள்ள தோட்டங்களில் உழைக்க அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து அவர்களைக் கொண்டு சென்றதும், அவ்வாறு கொண்டு செல்லும்போதே பலர் வழியில் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது.




இளவரசர் தொடர்ந்து தனது உரையில் “அடிமைத்தனத்தின் நீடித்த தாக்கத்தைப் பற்றிய எனது சொந்தப் புரிதலை நான் தொடர்ந்து ஆழமாக அறியும்போது அவர்கள் பட்ட துன்பங்களால் எனக்கு ஏற்படும் தனிப்பட்ட துயரத்தின் ஆழத்தை என்னால் விவரிக்க முடியாது” என்றார்.

பொதுநலவாய நாடுகளுடன் 2009இல் இணைந்து கொண்ட நாடான ருவாண்டா வினுடைய அதிபர் Paul Kagame தனது உரையில், “பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் எந்த வரலாற்றுத் தொடர்பும் இல்லாத புதிய உறுப்பினரான ருவாண்டா நாட்டில் இந்த மாநாட்டை நடத்துவது மாறிவரும் உலகத்திற்காகப் பொதுநலவாய நாடு களின் அமைப்பைப் புதுமைப்படுத்துவதற் கான எமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது” என்றார்.

மாநாட்டின் முடிவில் வெளியிட்ட அறிக்கையின் முக்கிய அறிவிப்புகளில் ஒன்று Gabon மற்றும் Togo ஆகிய சுதந்திர நாடுகள் இரண்டையும் பொது நலவாய நாடுகளின் 55 மற்றும் 56ஆவது உறுப்பினர்களாக அனுமதிப்பதாகும். 1960களில் பிரான்ஸில் இருந்து சுதந்திரம் பெற்ற இந்த இரண்டு நாடுகளும் பொது நலவாயநாடுகளுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. இந்த அறிவிப்பை வெளியிட்ட பொதுநல வாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளரான Rt. Hon. Patricia Scotland QC கூறும்போது, Gabon மற்றும் Togo என்ற இந்த இரண்டு துடிப்பான (vibrant) நாடுகளும் பொதுநலவாய நாடுகளின் குடும்பத்துடன் இணைந்து எங்கள் சாசனத்தின் விழுமியங் களுக்கும் மற்றும் இலட்சியங்களுக்கும் (aspirations) தங்களை அர்ப்பணிப் பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்றார்.

முன்னாள் பிரஞ்ச் காலனிகளாக இருந்த பிரஞ்ச்மொழி பேசுபவர்களைக் கொண்ட நாடுகளான Gabon மற்றும் Togo ஆங்கில மொழியின் செல்வாக்கில் இருக்கும் பொதுநலவாய நாடுகளின் குழுமத்தில் இணைவது ஆபிரிக்காவில் பிரான்ஸ் நாட்டின் செல்வாக்கு வீழ்ச்சி அடைவதையும் ஆங்கிலம் பேசும் குழுமத்தின் ஈர்ப்பு அதிகரிப்பதையும் எடுத்துக்காட்டுகிறது என ஊடகவியலாளர் தெரிவிக்கின்றனர். நான்கு ஆண்டுகளின் பின்னர் நேரில் நடைபெற்ற இம்மாநாட்டின் நிறைவு நாளான 2022 ஜூன் 25இல் இம்மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 117 விடயங்களைக் கொண்ட 22 பக்க அறிக்கை வெளியிடப்பட்டது.

உலகளாவிய நிலம் மற்றும் வளங்களைப் பாதுகாக்கக் காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு (Biodiversity loss) மற்றும் நிலையான நிலப் பராமரிப்பு

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)


























RE/MAX ACE
EXPERIENCE THE DIFFERENCE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham
$1,588,888
4+1 BR , 4 WR
Markham Rd/Denison St
SOLD
HIGHEST SOLD
PRICE ON THE STREET *
Semi-D- 4BR,4WR, Fin Bsmt,Sep E
Kingston Rd/ McCowan Rd
$2,899,000
Detached - BR: 5+5 WR:5
Lindsay
$399,000
Residential Land
Whitby
$1,098,900
Brand New - 3BR + 3WR
Midland Ave/ Kingston Rd
$659,900
2BR 2WR
Chinguacousy Rd & Wanless Dr
Brand New
Home in Brampton.
Closing Feb 2024.
$1,299,900
Semi-Detached BR: 3 WR: 4
Jane/Rutherford
FROM $ 599,000
10 UNITS
AVAILABLE
BR: 1 WR:1 Assignment Sale




WORK WITH THE BEST TEAM
GET YOUR HOME SOLD!
#1 HOMELIFE TEAM
IN ONTARIO
SIVA & JOY
KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS
irealtorteam.com
futuregtahomes.com
SIVA
SHANMUGANATHAN
Broker
JOY
SELVANAYAGAM
Broker
SASIKUMAR
SHANMUGANATHAN
Broker
416.545.7482
416.709.5000
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# புலம்பெயர் உறவுகளின் சிறுவர் இல்ல ‘சிறப்புணவு’ நிகழ்வுகள்




இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மேலும் ஒரு பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றனர். நாடு முழுவதும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் ஒரு பாதிப்பை எதிர்கொள்வதானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதே. அதுவும் வன்னியில் வாழும் மக்கள் தங்கள் அனைத்துப் பொருளாதாரத்தையும் இறுதிப் போரில் இழந்துள்ளனர்.

போரில் குடும்பத் தலைவர்களை- உழைக்கும் உறவுகளை இழந்த குடும்பங்கள் போர் முடிந்து 13 வருடங்களாகின்ற போதும் வறுமை நிலையிலேயே வாழ்கின்றன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடியினால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இரண்டு மூன்று மடங்கு விலை உயர்ந்துள்ளதால் அக்குடும்பத்தினர் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் தங்களின் உதவிகளை இயலுமான அளவு தொடர்ந்து நல்கி வருகின்றனர். ரஸ்ய - உக்ரைன் போர் காரணமாக உலக நாடுகளிலும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்நாடுகளிலும் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளமையினை சர்வதேச செய்திகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இருந்தும் புலம்பெயர் உறவுகளின் உதவி நடவடிக்கைகள் தடைப்படாமல் வந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் அமைப்பு ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் புலம்பெயர் உறவுகள் உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லங்களுக்கு வரும் உதவிகள் மிக உணர்வு பூர்வமானவை. நாட்டில் ஏற்பட்டுள்ள விலை உயர்வுகள் கூட இந்த சிறுவர் இல்லங்களை அதிகம் பாதிக்கவில்லை என்றால் அதற்குப் புலம்பெயர் உறவுகளின் உதவிகளும் காரணம்



என்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கது. புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகள் தங்கள் பிறந்தநாள் நிகழ்வுகளையும், தங்கள் உறவினரின் நினைவு தினங்களையும் சிறுவர் இல்லங்களில் பகிர்ந்து கொள்வதையும் பார்க்கும்போது நெகிழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது. இதுவொரு சிறந்த கலாசாரமாகவும் உள்ளது.

இத்தாயக மடலை இதுபற்றிக் குறிப்பிடவே எழுதுகின்றேன்.

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் தாயகத்தின் நினைவுகளுடனும், உணர்வுகளுடனும் இருக்கின்றனர் என்பதை கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லங்கள் எடுத்துரைக்கின்றன. கிளிநொச்சியிலுள்ள ‘மகாதேவா’ சிறுவர் இல்லங்களில் இதனை நான் நேரடியாகவே பார்த்து வருகின்றேன். புலம்பெயர் நாடுகளிலிருந்து வரும் நிதியின் மூலம் நினைவு தின நிகழ்வுகள், பிறந்த நாள் நிகழ்வுகளில் அந்த நண்பர்கள் சார்பில் கலந்துகொண்டு அந்தப் பிள்ளைகளுடனிருந்து உணவு உண்பதில் இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது.

வீட்டில்கூட குடும்பத்துடன் அமர்ந்து உணவு உண்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சிறுவர் இல்லத்திற்கு இதற்கென்று நேரம் ஒதுக்கி செல்லும் போது இவ்வாறான வாய்ப்பு கிடைக்கின்றது. பிள்ளைகளே உணவு பரிமாறி அந்தப் பிள்ளைகளுடன் இருந்து உணவு உண்பது மகிழ்ச்சியான பொழுதுகள்.

வழமையாக நல்ல உணவுகளே இந்த இல்லங்களில் வழங்கப்பட்டாலும், புலம்பெயர் உறவுகளின் நிதியின் மூலம் அதாவது, பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களில் ‘சிறப்புணவு’ இல்லப் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்வுகள் புகைப்படங்களாக, காணொளிகளாக சம்பந்தப்பட்ட புலம்பெயர் உறவுகளிடம் செல்கின்றபோது, அவர்கள் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

இல்லப் பிள்ளைகள் பெரும்பாலும் மகிழ்ச்சியாகவே காணப்படுகின்றனர். வீடுகளில் பெற்றோருடன் இருக்கும் பிள்ளைகளை விடவும் மகிழ்வாக அவர்கள் இருப்பதைக்கண்டு நான் ஆச்சரியப்படுவதுண்டு. அன்பும், நேர்த்தியான நிர்வாக நடைமுறை காரணமாகவும் சக பிள்ளைகளுடன் இணைந்திருப்பதால் அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர் என்றே தோன்றுகின்றது.

பாடசாலை அருகிலிருந்தாலும், அவர்கள் இல்லத்திற்குரிய பஸ்களில் இல்லத்தில் பணியாற்றும் பெண்களின் பாதுகாப்புடனேயே சென்று வருகின்றனர். பிரத்தியேக வகுப்புகள், விளையாட்டு போன்ற ஏனைய நடவடிக்கைகளும் அவ்வாறே நடைபெறுகின்றன. இவற்றின் பின்னணியில் புலம்பெயர் அமைப்புக்களின் வழிகாட்டல் இருப்பதாக தெரிகின்றது.

இல்லத்தில் இருக்கும் பெற்றோர் இல்லாத அல்லது பெற்றோரை தெரியாத சில பிள்ளைகளை புலம்பெயர் உறவுகள் சிலர் தத்தெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஒவ்வொரு பிள்ளைகளினதும் வாழ்க்கையில் ஒரு சோகமான கதை இருப்பதாகவே தெரிகின்றது. இல்லத்திலுள்ள பிள்ளைகளுடன் உரையாடும்போது, தனிப்பட்ட குடும்ப விபரங்களை கேட்பதில்லை. அதனைக் கூற அவர்களில் பலர் விரும்புவதும் இல்லை என்பதை அவர்களின் உடல் மொழி கூறும்.

அண்மையில் ஒரு பிள்ளையிடம் அவர்களின் பெற்றோர் குறித்து கேட்டேன். அப்பா வெளிநாடு ஒன்றில் இருப்பதாகக் கூறினார். அம்மா அண்ணன்மார் அனைவரும் வெளிநாட்டிலேயே வாழ்வதாகவும் அவர் தெரிவித்தார். வெளிநாட்டில் பெற்றோர் இருக்கும்போது இந்தப் பிள்ளை மட்டும் ஏன் இங்கே சிறுவர் இல்லத்தில் இருக்கின்றார் என்கின்ற கேள்வி என்னுள் எழுந்தது. பிறகுதான் தெரிந்தது. வெளிநாட்டிலிருக்கும் நல்ல உள்ளம் படைத்த அன்பர் ஒருவரால் அந்தப் பிள்ளை தத்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதும், உயர்தர வகுப்பை முடித்துக் கொண்டு அவர் வெளிநாட்டிற்குத் தனது ‘அப்பா’விடம் செல்லப் போகின்றார்



என்பதும்.

புலம்பெயர் உறவுகளின் அமைப்புகள் அங்கிருந்து பல்வேறு உதவிகளை நல்கி வருகின்ற நிலையில் சிறுவர் இல்லங்களில் வழங்கப்படும் சிறப்புணவு நிகழ்வுகள் அதிகம் தனிப்பட்டவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளை முகநூலில் பதிவிடுகின்றபோது, அதனைப் பார்க்கும் வேறு பலரும் தாங்களும் தங்களின் பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் நினைவு நாள் நிகழ்வுகளை சிறுவர் இல்லங்களில் நடத்தத் தொடர்பு கொள்கின்றனர்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பிறந்து வளர்ந்த இளையோர் கூட இவ்வாறான நிகழ்வுகளை நடத்த ஆர்வம் கொண்டுள்ளனர். இவ்வாறான உறவுநிலை சிறந்ததொரு பண்பாடாக வளர்ந்து வருகின்றமை பெருமகிழ்ச்சிக்குரியது.




விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228
Mr.S.F.Xavier (Teacher)

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

## நாமும் நமது இல்லமும் 610

# புதிய அடுக்குமாடி மனைகளில் நெருக்கடி



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

உலகளாவிய ரீதியில் ஆதன வியாபாரத்தில் ஏற்பட்டு வரும் விலை அதிகரிப்பு நிர்மாணப் பொருட்களில் ஏற்படும் பற்றாக்குறை, பொருட்களைக் குறிப்பிட்ட பகுதிக்கு கொண்டு வந்து சேர்ப்பதில் ஏற்படும் காலதாமதம், அரசுகளால் விதிக்கப்படும் வரிகள் மற்றும் புதிய நிர்மாணம் செய்யும்போது அரசுகளிற்கு குறிப்பாக உள்ளூராட்சி சபைக்கு வழங்கும் வளர்ச்சிக் கட்டணம் (Development Fee) அதீத அதிகரிப்பு, கட்டிட நிலத்தில் விலையில் ஏற்படும் விலை அதிகரிப்பு, ஓர் அடுக்குமனைத் தொகுதி கட்டப்பட்டு வாங்கியவருக்குக் கையளிக்கும் காலத்தில் ஏற்படும் நீண்டகால இடைவெளி, பணவீக்கத்தால் மத்திய வங்கியின் வட்டிவீத அதிகரிப்பு இதனால் அடுக்குமனைத் தொகுதியின் நிர்மாண நிறுவனத்திற்கு ஏற்படும் மொத்த செலவு போன்றவை, எதிர்காலத்தில் நிர்மாணத்துறையில் பல நெருக்கடிகளை ஏற்படுத்தும் என எதிர்வு கூறலாம்.

புதிய அடுக்குமனையை ஆராய்ச்சி செய்யும் Urbanation என்ற நிறுவனம் அண்மையில் இதனைப்பற்றிய சில தகவல்களை வெளியிட்டு உள்ளது.

இந்த விலை அதிகரிப்பால் ரொறொன்ரோ வில் விற்கப்பட்ட ஏறக்குறைய 5000 அடுக்குமனை அலகுகள் (Highrise condo. Units) கைவிடப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

குறிப்பாக, ரொறொன்ரோ பகுதியில் ஒரு சதுர அடி $1,000இற்குக் குறைவாக விற்கப்பட்டவை அநேகமாகக் கைவிடப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. எனினும், ஆரம்ப முதலீடாக வழங்கப்பட்ட பணம், ஒன்ராறியோ அரசின் சட்டப்படி வாங்கியவரிற்குத் திருப்பி வழங்கப்படும். இவ்வாறான நிலைமை 2017/2018 காலப்பகுதியிலும் காணப்பட்டதனை 'விளம்பரம்' வாசிப்பாளர்கள் அறிவீர்கள். அப்பொழுது நிர்மாண விலை அதிகரிப்பால் 4,687 அடுக்குமனைகள் கைவிடப்பட்டு இருந்தன. குறிப்பாக (10% - 14%) நிர்மாண விலையில் ஏற்படும் அதிகரிப்பு, விற்ற நிறுவனத்தின் (Developers) வருமானத்தில் பெரிய பகுதியை குறைத்து விடும்.



2021இல் கனடா ரீதியாக, குறிப்பாக ரொறொன்ரோவில் அதிகளவான அடுக்கு மனைகள் கட்டுவதற்காக விற்கப்பட்டு இருந்தது. ஒன்றாரியோ வில் தொழில் புரிவோருக்கு ஏற்படும் தட்டுப்பாடு, இன்றைய காலத்தில் ஏற்பட்டுள்ள தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் போன்றவை பெரிய நெருக்கடியை நிர்மாணத் தொழில்துறைக்கு ஏற்படுத்தி யுள்ளது. இதனால் எதிர்காலத்தில் கொண்டுவர இருக்கும் புதிய அடுக்கு மனைத் தொகுதியின் விலையில் பெரிய அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே ரொறொன்ரோவில் ஒரு சதுர அடியின் விலை $1,400 என்ற இலக்கை எட்டியுள்ளது. இதனைவிட தொடர்ந்து அதிகரிக்குமே தவிர குறைய மாட்டாது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

அண்மைக்காலமாக வியாபாரத்திற்காக வும், முதலீடாகவும் அநேகர் ஆதனத்தில் முதலீட்டுள்ளனர். இன்றைய நிலையில், வட்டிவீத அதிகரிப்பாலும், விலை அதிகரிப்பாலும் 500 சதுர அடி அடுக்கு மனை ஒன்றில் முதலிடுபவர் 20% ஆரம்ப முதலீட்டில், மாதாந்த அடமானக் கொடுப்பனவு (mortgage payment) மட்டுமே $3,000இற்கு மேலாகக் காணப் படுகின்றது. இதனைவிட மற்றைய செலவுகளும் உள்ளது. $3,000 மேலாக வாடகைக்குக் கொடுப்பது இன்றைய நிலையில் சாத்தியமா? 500 சதுர அடி ஓர் அறை கொண்ட மனையின் நிலைமை? எனினும் 2022இன் 2ஆவது காலப் பகுதியில் ரொறொன்ரோவின் பெரும் பாகத்தில் ஏறக்குறைய 12,900 அடுக்கு மனைகள் சந்தைக்கு வர இருப்பதாகத் தெரிய வருகின்றது. யூன் 2022இன் மத்திய பகுதிவரை 8,606 மனைகள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், விற்கப்படும் எண்ணிக்கையில் மந்த நிலையை காணக்கூடியதாக உள்ளது. தொடர்ந்து வட்டிவீத அதிகரிப்பை ஏற்படுத்தப் போவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளார்.

யூன் 23, 2022இல் வெளிவந்த மே 2022 இற்குரிய கனடிய பணவீக்கம் (Inflation) 77%ஆகக் கடந்த 40 வருடத்தில் அதிகமாக உள்ளது. யூலை 13, 2022இல் மத்திய வங்கியின் ஆளுநரின் அறிவிப்பில் 0.50% அல்லது அதற்கு மேற்பட்ட வட்டி வீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

இவ் அதிகரிப்பு மேலும் ஆதன வியாபாரத்தில் மந்தநிலையை ஏற்படுத் தும். அதீத வட்டிவீத அதிகரிப்பு கனடியப் பொருளாதாரத்தை சுருக்கத்திற்கு (மந்த நிலைக்கு) (Recession) கொண்டு செல்லாம்.




## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா

### நூல் வெளியீட்டு விழா

இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடாவின் அனுசரணையில்
இணுவிலான் சிகாகோ பாஸ்கரின் படைப்பிலே இரு நூல்களின் வெளியீடு

1. மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்
2. சீனிப் புளியடி (சிறுகதைத் தொகுப்பு)

காலம் : 02-07-2022 (சனிக்கிழமை) நேரம் : மாலை 5:00 மணி

இடம் : கனடா கந்தசுவாமி கோவில்-விழா மண்டபம், 733 Birchmount Road, ஸ்காபுரோ

கனடா வாழ் இணுவில் மக்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் அனைவரையும் இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கிறோம்.

647-200-2177 சாந்தி சர்வானந்தா 416-430-0422 மு.கிருபாகரன்
416-732-5898 ப. கஜஜெயன் 262-598-4650 இணுவிலான் சிகாகோ பாஸ்கர்

# அனைத்து செயற்பாடுகளையும் சீர்குலைத்துள்ள எரிபொருள் தட்டுப்பாடு

- விகிர்தன் -

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் உச்சமாக இன்று வெளித்தெரிவது எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கிய வரிசைகள். நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிலையங்களை நோக்கி எரிபொருள் கொள்வனவிற்காக மிக நீண்ட வரிசைகளில் - இரண்டு மூன்று கிலோமீற்றர் வரையும்கூட இரவு பகலாக மக்கள் காத்திருக்கின்றனர். இவ்வாறு காத்திருக்கும் மக்கள் சில சந்தர்ப்பங்களில் எரிபொருள் கிடைக்காமல் ஏற்மாற்றுடன் செல்வதும் உண்டு. நீண்ட நேரம் - அதாவது, ஒரு நாள் முழுவதும் காத்திருந்து ஒன்று அல்லது இரண்டு லீற்றர் எரிபொருளை மட்டுமே அவர்களால் கொள்வனவு செய்ய முடிகின்றது. இலங்கையின் வரலாற்றில் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டதில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் இரண்டு மூன்று மடங்காக அதிகரித்துள்ள போதிலும், அவற்றை கொள்வனவு செய்ய இவ்வாறான வரிசைகள் இன்னமும் ஏற்படவில்லை. இனிவரும் நாட்களில் அவ்வாறு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான நேரடிப் போராட்டங்கள் சற்று அடங்கிப் போனதைப்போல் தோன்றும் நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இப்போது பதற்றப் பகுதிகளாக மாறியுள்ளன. வீதி மறிப்பு போராட்டங்கள், வன்முறைகள், மோதல்கள், காயங்கள், மரணங்கள் எல்லாமே அப்பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. ஊழல் மோடிகளும் நடைபெறுகின்றன.

எரிபொருளுக்காக நீண்ட நேரம் காத்திருப்போர் பாரிய மன உளைச்சலுக்கும் உள்ளாகின்றனர். வாக்குவாதங்கள் மோதல்களாக மாறுகின்றன. இந்த மோதல்களின் போது உயிழப்புகளும் பதிவாகி வருகின்றன. வயது முதிர்ந்தோர் மயங்கி விழுகின்றனர், உயிரிழக்கின்றனர். இவ்வாறு, எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் அத்தியாவசிய சேவைகளும் பாதிப்படைகின்றன. குறிப்பாக சுகாதார சேவைகள் பாதிப்படைகின்றன. உதாரணமாக அவசர சத்திரசிகிச்சையை மேற்கொள்ள செல்லும் மருத்துவரின் போக்குவரத்திற்குத் தடை ஏற்பட்டால் நோயாளி மரணிக்கும் நிலைதான் ஏற்படும். இவற்றை கருத்தில்கொண்டு இந்த மோசமான நிலையை தவிர்க்க பொறிமுறை ஒன்று அவசரமாக ஏற்படுத்தப்படல் வேண்டும். இவற்றை செய்வதில் அரசாங்கத் தரப்பினர் மந்த கதியிலேயே சிந்திப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதற்கிடையே, எரிபொருள்கள் கள்ளச் சந்தையில் இரண்டு மூன்று மடங்கு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. 470 ரூபாய் விலையேற்றத்துடன் வந்துள்ள பெற்றோல் வெளியே 1500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வருகின்ற இந்த எரிபொருள் எவ்வாறு கள்ளச் சந்தைக்கு செல்கின்றது? எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளே இதற்கு காரணம். எரிபொருள் நிலையங்களின் பாதுகாப்பிற்கும், கண்காணிப்பிற்கும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் கடமையில் இருக்கும் போதே இவ்வாறு மோசடிகள் நடைபெறுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



அத்தியாவசிய சேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள போதும் அத்தியாவசிய சேவையாளர்களை முன்னே வரவிடாமல் தடுக்கும் அடாவடிக் குழுக்களும் அங்கு செயற்பட்டு வருகின்றன.

வாகனங்களுக்கான பெற்றோல், டீசலுக்கு இவ்வாறான நிலை உள்ளதென்றால் மண்ணெண்ணெயை கண்ணிலும் காண முடிவதில்லை. மலையகம் உள்ளிட்ட தென்னிலங்கை மக்கள் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். அது கிடைக்காத பட்சத்தில் அருகே வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். எரிவாயு தட்டுப்பாடு காரணத்தினால் மண்ணெண்ணெய் அடுப்பினை மக்கள் தங்கள் வீடுகளில் பயன்படுத்த தொடங்கினர். அதற்கும் சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் கப்பல்கள் வருகின்றன. அவற்றிலிருந்து எரிபொருளை இறக்க முடியாத நிலையில் அரசாங்கத்திடம் நிதி இல்லை. அதனால் அக்கப்பல்கள் காத்திருக்க நேர்கின்றது. பின்னர் காத்திருப்பிற்கான தொகையினையும் செலுத்தி அவற்றை விநியோகிக்கும் போது எரிபொருளின் விலையினையும் அதிகரிக்க வேண்டி வருகின்றது.

இதோ இரண்டு கப்பல்கள் வருகின்றன- மூன்று கப்பல்கள் வருகின்றன என அமைச்சர்களும், அதிகாரிகளும் கூறிக் கொண்டிருந்தாலும் எல்லாமே தாமதமாகும் நிலைமைதான் உள்ளது. அண்மையில் பெற்றோல் கப்பல் வருவதாக உறுதியளித்த எரிசக்தி அமைச்சர் அது வர தாமதமானதால் மக்களிடம் மன்னிப்பு கோரினார்.

எரிபொருள் மிகக் குறைந்த அளவில் கையிருப்பு உள்ளபோது மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே இருக்கும் எரிபொருளை பகிர்ந்தளிக்க வேண்டும். சுகாதாரம், மருத்துவம், உணவு விநியோகம், பொதுப் போக்குவரத்து என்பன மிக அத்தியாவசிய சேவைகளாகும். எரிபொருள் கப்பலில் வந்தடைந்து அவை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படும்வரை இடைக்கால நடவடிக்கையாக இதனை நடைமுறைப்படுத்தலாம். வேறு வழியில்லை. இதனால் நீண்ட வரிசைகளை குறைக்க முடியுமாகவிருக்கும். வன்முறைகள், ஊழல் மோசடிகளை தடுக்கவும் முடியும்.

இப்போது கையிருப்பிலுள்ள பெற்றோல், டீசலை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 27ஆம் திகதி நள்ளிரவு முதல் இது நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் வரிசைகள் குறைந்ததாகத் தெரியவில்லை.

துறைமுகங்கள், சுகாதாரத் துறை, அத்தியாவசிய உணவு விநியோகம், மற்றும் விவசாயப் பொருட்களின் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் மற்றும் பெற்றோலை விநியோகிக்கும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தும் அநேகமாக இடைநிறுத்தப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தினால் பொதுப்போக்குவரத்திற்கான எரிபொருளை விநியோகிப்பது அவசியமானது. இதனை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகியோர் கடந்த 27ஆம் திகதி கட்டார் சென்றனர். இதேவேளை, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த 28ஆம் திகதி ரஸ்யாவிற்குப் பயணம் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டது. ரஸ்யாவில் எரிபொருள் கொள்வனவு தொடர்பாக அவர் கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர்களின் இந்தப் பயணங்கள் வெற்றியளித்ததா என்ற தகவல்கள் இந்தப் பத்தி எழுதும்வரை தெரியவில்லை.

சமாளிக்க முடியாத அளவு, சிக்கலான ஒரு கட்டத்திற்கு எரிபொருள் பிரச்சினை வந்த பின்னரே இவ்வாறு அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் பறக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

எரிபொருள் பிரச்சினையானது நாட்டின் பொருளாதாரத்தில் ஒவ்வொரு விடயத்தையும் சீர்குலைப்பதுடன், மக்களின் சமூக கட்டமைப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நானிலம் போற்றும் நட்பு - 2




- அகணி -
authorakani@gmail.com


திருவள்ளுவர் குறள் 782இல் அறிவுடையரின் நட்பு பற்றிய பெருமையை எடுத்தியம்புகிறார். அறிவுடையோரை நட்பாகக் கொள்வது பெரும் செல்வமாகக் கருதப்படுகிறது.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு."

உரையாசிரியர் மு.வரதராசன் "அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது, அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன." என இக்குறளிற்கு விளக்கம் தருகிறார். உரையாசிரியர் சாமி சிதம்பரனார் "அறிவுள்ளோர் நட்பு பிறைபோல் வளரும். அறிவற்றோர் நட்பு முழுமதிபோல் குறையும்" என்று விளக்கம் கூறுகின்றார். "அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறைநிலவாகத் தொடங்கி முழுநிலவாக வளரும். அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதிபோல் முளைத்துப் பின்னர் தேய்பிறையாகக் குறைந்து மறைந்து போகும்" என்று விளக்கம் தந்துள்ளார்.

நண்பர்கள் என்ற உறவினை மிகவும் உயர்ந்த உறவாகக் கருதப்பட்டாலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் நல்ல நண்பர்களைக் காணமுடிகிறது. துன்பங்கள் வருகின்ற பொழுது உடனிருந்து உதவும் எக்காலத்தும் துணையாக இருக்கும் நல்ல நண்பனாவான். நேரில் நன்றாகப் பேசி விட்டு இகழ்ந்து பேசும் தன்மை கொண்ட நண்பர்களால் பயனேதும் இல்லை. இவர்களைத் தீய நண்பர்கள் என்றே வகைப்படுத்த முடியும். நல்ல நண்பர்கள் தமது நண்பர்கள் நீதியற்ற முறையில் மற்றவர்களால் இகழ்ந்து பேசப்படும் நிலையிலும் அதனை மறுத்துப் பேசிக் காத்துக் கொள்வர். நல்ல நண்பர்கள் இருப்பது பெரும் பலமாகவிருக்கும் அதே நேரத்தில் தீய பழக்கங்களைக் கொண்ட நண்பர்களால் பேரழிவும் ஏற்பட்டு விடுகிறது. நண்பர்கள் தமது விடயங்களை ஒழிவு மறைவு இன்றிப் பகிர்ந்து கொள்வது அவர்களின் உளநலத்திற்கும் நன்மையைக் கொடுக்கும். ஆனால் அதற்குரிய தகுதியை குறிக்கப்பட்ட நண்பன் கொண்டிருக்கின்றாரா என்று ஆராய்ந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

நண்பர்களின் தொடர்பாடல் முறையானது காலத்தோடு, மற்றும் வாழும் சூழல் என்பவற்றோடு மாறுபடும் தன்மை கொண்டது. இந்தக் காலத்தில் சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் அதிகளவு நட்பு ஏற்பட்டு விடுகிறது. நீடி நிலைக்கும் சிறுபராயம் முதலான நட்புகளும், கல்லூரி, பல்கலைக்கழக நட்புகளும் அதிகமானளவு உறுதித்தன்மை கொண்டதாக இருப்பதைக் காணலாம். இளம் பராயத்தில் நல்ல நண்பர்களைப் பெற்றவர்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சீராக அமைந்து வாழ்க்கையில் வெற்றிப் படிகளை நோக்கி நகர்வர்.

நண்பர்கள் என்று கூறும்பொழுது ஒரு வகையான உறவு முறையைக் குறிக்கும். நட்பு என்னும் பொழுது பொதுவாக நண்பர்களிடையே காணப்படும் உறவின் தன்மையைக் குறிக்கும். இத்தன்மை ஏனைய உறவு முறைகளிற்கிடையேயும் காணப்படும் நிலைமை உள்ளது.



எடுத்துக்காட்டாக தந்தையும் மகனும் நண்பர்கள் போன்று பேசிப் பழகும் பொழுது அவர்களிற்கிடையே நல்ல நட்பு உள்ளது என்று கூறிக்கொள்கின்றோம். சில ஆசிரியர்களுக்கும், மாணவர்களிற்கு மிடையே கூட நல்ல நட்பு உள்ளது என்று பேசிக் கொள்கின்றோம்.

ஆனால் பெரும்பான்மையாக நட்பு என்று கூறும்பொழுது நண்பர்களிற்கிடையே காணப்படும் உறவின் தன்மையையே குறிக்கும் என்று கூறலாம் என எண்ணுகின்றேன்.

இப்பொழுது எழுத்துரிமை யாருடையது என அறியாத பொழுதிலும் நட்பு பற்றிய பொன்மொழிகளைக் கவனிப்போம்.

"நண்பர்கள் என்ற சமுத்திரத்தில் நீந்திச் செல்லுங்கள். அதில் நீங்கள் அமிழ்ந்து விடமாட்டீர்கள். ஏனென்றால் நட்பு என்ற படகு உங்களுக்குக் கைகொடுக்கும்" என்ற பொன்மொழி நட்பின் மகிமையை எடுத்தியம்புகின்றது.

"உறவற்ற நிலையிலே உன் உறவாய் வருவது நட்பு.. உயிரற்ற நிலையிலே உன் உயிராய் வருவதும் நட்பு." என்கிறது இன்னொரு பொன்மொழி.

"நாம் பிறக்கும்போது நம்மோடு பிறப்பதில்லை நட்பு. நாம் இறந்த பிறகும் அதற்கு இறப்பு இல்லை அதுவே நட்பு." என்பது இன்னொரு பொன்மொழி.

"ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஓர் ஆலோசகர் தேவைப்படும். அந்த ஆலோசகராக நண்பனால் மட்டுமே இருக்க முடியும்." என்பது இன்னொரு பொன்மொழி.

"எதிர்பார்ப்பு இல்லாமல் கிடைக்கும் பொக்கிசம் எதிர்பார்ப்பு ஏதுமின்றி சுற்றும் கடிகாரம் நட்பு" என்கிறது இன்னொரு பொன்மொழி.

"எதிர்பார்ப்புகளே இல்லாமல் இணைந்திருக்கும் ஓர் உறவு நட்பு ஆகும்." என்பது இன்னொரு பொன்மொழி.

"நமது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த உறவே நட்பு ஆகும்" என்பதும் ஒரு பொன்மொழி.

"ஒரு துளி கண்ணீரைத் துடைப்பது நட்பு இல்லை. மறு துளி வராது தடுப்பதுதான் உண்மையான நட்பு" என்பது இன்னொரு பொன்மொழி.

"உண்மையான நட்பைவிடச் சிறந்தது எதுவுமில்லை. அதனை இழந்து விடாதீர்கள்" என்பது இன்னொரு பொன்மொழி.

"தவறு என்பது வாழ்க்கையின் ஒரு பக்கம். ஆனால் நட்பு என்பது ஒரு புத்தகம். ஒரு பக்கத்திற்காகப் புத்தகத்தை இழக்காதே" என்பது இன்னொரு பொன்மொழி.

மேலும் சில ஆங்கிலப் பொன்மொழிகளைக் கவனிப்போம். "வசதியாக இருக்கும் நண்பர்களை உருவாக்காதீர்கள். உங்களைத் தூண்டும் நண்பர்களை உருவாக்குங்கள்" என்பது தோமஸ் வட்சன் அவர்களின் பொன்மொழி. ("Don't make friends who are comfortable to be with. Make friends who will force you to lever yourself up." — Thomas J. Watson).

"உண்மையான நண்பர்கள் செய்யும் மிக அழகான கண்டுபிடிப்பு என்னவென்றால், அவர்கள் பிரிந்து செல்லாமல் தனித் தனியாக வளர முடியும்" என்பது எலிசபெத் போலீ அவர்களின் பொன்மொழி. ("The most beautiful discovery true friends make is that they can grow separately without growing apart." — Elisabeth Foley).


"நட்பின் இனிமையில் சிரிப்பு இருக்கட்டும், ஏனென்றால் சிறிய விடயங்களின் பனிக் கூட்டத்தில் இதயம் தனது காலையைக் கண்டுபிடித்து புத்துணர்ச்சியடைகிறது" என்பது காலில் கிப்ரான் அவர்களின் பொன்மொழி. ("In the sweetness of friendship let there be laughter, for in the dew of little things the heart finds its morning and is refreshed." — Khalil Gibran)

"உங்கள் உடைந்த வேலியைக் கண்டும் காணாதவர் மற்றும் உங்கள் தோட்டத்தில் உள்ள பூக்களைப் போற்றுபவர் ஒரு நண்பர்." என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழியின் தமிழாக்கம். ("A friend is one who overlooks your broken fence and admires the flowers in your garden.- Unknown Author").

பொன்மொழிகள் மிகவும் உன்னதமான அறிவுரைகள், உளவியல் கருத்துகள் என்பதை மேலே கூறப்பட்ட சில எடுத்துக் காட்டுகள் மூலம் உணர்ந்திருப்பீர்கள். நட்பு பற்றி நகரும் தொடர்கட்டுரையில் நட்பு பற்றிப் போதிக்கும் அருமையான பொன்மொழிகள் ஊடாகவும் நாம் உரையாட வேண்டியது மிகவும் பயனுள்ளது என்று கருதி சில பொன்மொழிகளை எடுத்து உரையாடிக் கொண்டேன்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)







Govt. Reg. No.571/2007

திருச்சிற்றம்பலம்
அன்னதான அறக்கட்டளை
அனைவரும் சாப்பிட வாருங்கள்!

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் ஆனி திருமஞ்சன திருவிழா அழைப்பிதழ்

27-06-2022, திங்கட் கிழமை முதல் 07-07-2022, வியாழக்கிழமை வரை நடைபெறும் திருவிழாவை காணவரும் பக்தர்களுக்கு திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளையில் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒரு நாள் கட்டளை உபயம் இந்தியன் ரூபாய் 50,000 ஆகின்றது. தங்களால் இயன்றதை செலுத்தி இந்த தர்மத்தில் தாங்களும் முழுத்த அளவு பங்கு கொண்டு இதன் சிறந்த பலன்களை அடைய அன்புடன் அழைக்கின்றோம்.

நன்கொடைகளை செலுத்தி தங்கள் விலாசம் குடும்ப பெயர்கள் நட்சத்திரம் ராசி, கோத்ரம் எழுதி அனுப்பவும். ஸ்ரீ நடராஜரிடத்தில் தங்கள் குடும்பம் சங்கல்பம் பூஜை செய்து பிரசாதங்கள், முறையான ரசீது அனுப்பி வைக்கின்றோம். வாழ்க வளமுடன், வளர்க நலமுடன், ஆசிர்வாதங்கள்.

**C.NAVATHANDAVADEEKCHIDHAR**, 22/10, East Sannathi, Chidambaram - 608001.
Tamil Nadu, India. **Mob: 93455 12976**

**Thiruchitrambalam Annadhana Trust**
State Bank of India A/c No.30263863248
Chidambaram Branch IFSC: SBIN0000823
e-mail: santhanasubramani1969@yahoo.com, anandhancdm2015@gmail.com
Google Pay: 93455 12976 (OmGanesh) Whatsapp: 93455 12976
web: thiruchitrambaalam.org



# பொதுநல...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

(Sustainable land management) ஆகியவற்றில் ஒருங்கிணைந்து நடவடிக் கைகளை எடுக்க அனைத்து உறுப்பு நாடுகளும் உறுதியளிக்கும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. நிலையான நகரமயமாக்கல் (Sustainable urbanisation) மற்றும் குழந்தை பராமரிப்பு என்பவற்றிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இம்மாநாட்டில் ருவாண்டா, கனடா, Seychelles, Samoa உட்பட 15 நாடுகளின் பிரதம மந்திரிகள், அதிபர்கள், அமைச்சர்களுடன் இளையோர் பிரதிநிதி கள் ஒரு வட்டமாக அமர்ந்து இளையோர் தலைமையிலான நிலையான வளர்ச்சிக் கான (Sustainable development) முக்கியமான உரையாடல்களை நிகழ்த்தியது சிறப்பு விடயமாகக் கருதப்படுகிறது.







பொதுநலவாய நாடுகளை நிலையான (Sustainable) சக்திவளத்திற்கு மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக Kenya மற்றும் Eswatini நாடுகள் தலைமையில் நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இவர்கள் புவிவெப்ப ஆற்றலைப் (Geothermal energy) பயன்படுத்துதல் சக்திவளம் தொடர்பாகக் கல்வியறிவைப் புகட்டுதல் போன்றவற்றை முன்னெடுப்பர்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யக் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ $500 மில்லியன் பெறுமதியான திட்டங்களை அறிவித்தார். இதில் $250 மில்லியன் "Sub-Saharan Africa" பகுதியை (ஆபிரிக்காவில் சாகாராவிற்குத் தெற்கில் இருக்கும் நாடுகள்) மையமாகக் கொண்டு உலகளாவிய உணவுப் பாதுகாப்பு நெருக்கடியைத் தீர்க்க உதவும் திட்டத்திற்கு முதலிடப்படும். மீதி $250 மில்லியன் உலகளாவிய ஆரோக்கியம், பாலின சமத்துவம், பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் (Sexual and Reproductive health) போன்ற முக்கிய விடயங்களில் நடவடிக்கை எடுக்க முதலிடப்படும்.



Prime Minister Justin Trudeau & Foreign Affairs Minister Melanie Joly

இம்மாநாட்டில் Botswana, Cameroon, Ethiopia, Kenya மற்றும் Zambia நாடுகளுடன் கனடியத் தனியார் நிறுவனங்கள் செய்து கொண்ட $148 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களைக் கனடியப் பிரதமர் வரவேற்று தனது உரையில் குறிப்பிட்டார். "ஆபிரிக்க நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவது நமது பொருளாதார மீட்சிக்கு முக்கியமானது. இது எமது நடுத்தர வர்க்கத்தை வளர்ச்சியுறச் செய்யும். அத்துடன் பல வேலைகளை உருவாக்கும் என்றார்.

இம்மாநாட்டு அறிக்கையில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை கண்டிக்கும் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இவ் அமைப்பு சொந்தமாக ஒரு கண்டனத்தை இத்தீர்மானத்தில் வெளியிட வில்லை.

பிரிட்டிஷ் மற்றும் கனடா ஆகிய இரண்டு நாடுகளும் இரண்டு நாட்களாகப் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களை உலகளாவிய எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றத் திற்கு ரஷ்யா மீது பழியைப் போட்டுக் கண்டிக்கும் தீர்மானத்தை பொதுநலவாய நாடுகளின் சார்பில் வெளியிடும் இறுதி அறிக்கையில் இடம்பெறச் செய்த முயற்சி பலனளிக்கவில்லை.

மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யாவிற்கு எதிராகத் தீர்மானம் எடுக்கும்போது 11 பொதுநலவாய நாடுகளின் உறுப்பினர்கள் அவ்வாக் கெடுப்பில் கலந்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டிற்கு வெளியே ஊடகவியலாளர் களைச் சந்தித்த கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ மற்றும் வெளியுறவு விவகார அமைச்சர் Melanie Joly இருவரும் உலகளாவிய உணவுப் பாதுகாப்பு நெருக்கடிக்கான பழியை ரஷ்யாவின் மீது சுமத்தினர். வெளியுறவு விவகார அமைச்சர் Melanie Joly முன்னர் ஊடகவியலாளரைச் சந்திக்கும் போது, "ரஷ்யா உணவை ஆயுதமாக்கு கிறது. அது 50 மில்லியன் உயிர்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது" என்றார்.

உக்ரைன் உலகின் நான்காவது பெரிய தானிய ஏற்றுமதியாளராக உள்ளது. அது 30 மில்லியன் தொன் (Tonnes) தானியங்களை சேமிப்பில் வைத்துள்ளது. அத்துடன் கோடைகால அறுவடைக்கு இன்னும் சில வாரங்களே உள்ளது. இதனால் அங்கு விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கடலோடு சில நிமிடம்

கடலே
கடலலையே
உன்னை
சுட்டுவிரல் கொண்டு
தொட்டுப்பார்க்க ஆசை
முழங்கால் தொடும் நீருக்குள்
மூழ்கியெழ ஆசை
கால்களை நனைத்தபடி
கச்சான் கொறிக்க ஆசை
நீண்ட தூரம் சென்று
நீச்சல் அடிக்க ஆசை
கூட்டமாக சேர்ந்து
பந்து விளையாட ஆசை
பொங்கி வரும் அலை நுரையை
கைகளால் ஏந்த ஆசை

கடலே
கடலலையே
அப்பொழுது நாம்
வீட்டுக்குள் இருந்து
கடலுக்கு வந்தோம்
எப்பொழுது நீ
எங்கள் வீட்டுக்குள்
வந்தாயோ
அன்றிலிருந்து உன்னை
தொட்டுப் பார்க்க அல்ல
தூரத்தே நின்று உன்னை
நினைப்பதற்கு கூட
அச்சப்படுகின்றோம்



ஆண்டு தோறும் - நாங்கள்
எங்கள் ஊர் சாமிகளைத்
தீர்த்தமாட
கடலுக்கு கொண்டுவருவோம்
எப்பொழுது நீ
எங்கள் வீட்டு சாமிகளை
கடலுக்குள்
கொண்டு போனாயோ
அன்றிலிருந்து உன்னை
தொட்டுப் பார்க்க அல்ல
தூரத்தே நின்று - உன்னை
நினைப்பதற்கு கூட
அச்சப்படுகின்றோம். - அகில்



# அளவெட்டியில் இருந்து அல்பேட்டாவுக்கு!

## Dr. த. பாலசந்திரனுடன் சந்திப்பு

விளம்பரம் சார்பாக - பாரி சுப்பிரமணிமும்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்" என்று எங்கள் தலைமைத் தமிழ் கவிஞன் பாரதி தமிழர்களுக்குக் கட்டளையிட்டான். அது உலகில் உள்ள கலைச்செல்வங்களை எல்லாம் தமிழன் அறிய வேண்டும் என்ற பெரும் விருப்பால்.

ஆனால், ஈழத்தமிழர் கலைச் செல்வங்களை சேர்ப்பதற்கல்ல. இனக் கொலைவெறியில் இருந்து தப்புவதற்காக எட்டுத்திக்குகளும் அடைக்கலம் தேடினர். அப்படி வந்து கனடாவில் மருத்துவத் துறையில் ஒரு மாகாணத்தில் தலைமை வைத்தியராக இருக்கும் ஒரு பெருந்தகையை சந்திக்கும் வாய்ப்பு "விளம்பரம்" பத்திரிகைக்குக் கிடைத்தது.

முதல் பார்வையிலேயே, ஆழமும் அறிவும் அமைதியும் கொண்ட அந்த வைத்தியர் எங்களை வசீகரித்தார்.

தயங்கித் தயங்கிப் பேசத் தொடங்கியவர், சொற்ப நேரத்தில் மனம்விட்டு பேசத் தொடங்கினார். தன்னுடைய முழுப்பெயர் Dr. தம்பிராஜா பாலசந்திரன் என்றும் தற்போது தான் வகிக்கும் பதவி 'Alberta Office of the Medical Examiner - Associate Clinical Professor of Pathology, University of Alberta' என தன்னுடைய பதவி, படிப்பு எல்லா வற்றையும் ஒரு குழந்தையைப் போல் கள்ளம் கபடம் இல்லாமல் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டிதான் தன்னுடைய சொந்த ஊர். அளவெட்டி அருகில் இருந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில்தான் படித்தேன். அப்பா அரசு உத்தியோகத்தில் இருந்தாலும், விவசாயம்தான் எங்கள் உயிர்மூச்சு. காலையில் சேவல் கூவும் வேளையில் எழுந்து வயலுக்குப் போக வேணும். அதேபோல் பின்னேரம் பாடசாலை விட்டு வந்ததும், ஆடு, மாடு பராமரிக்க வேண்டும். திரும்பவும் வயலுக்குப் போக வேண்டும்.

பெற்றோர்கள் கண்டிப்பாகத்தான் வளர்த்தனர். நாங்கள் முன்னுக்கு வர வேணும் என்றால் கல்விதான் அதற்கு ஒரே வழி. எல்லா வேளைகளிலும் படிப்பை முக்கியப்படுத்தினார் என் அப்பா. வேறு பொழுதுபோக்குகளுக்கு அனுமதியில்லை. அதைவிட எனக்குக் கிடைத்த வரம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் அதன் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணிமும்.

இப்ப, எப்படியோ தெரியாது. அந்தக் காலத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த கல்லூரி. நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில், ஒரு வருடத்தில் முப்பது பேர் பல்கலைக்



***Dr. Thambirajah Balachandra retired as Manitoba's chief medical examiner in 2016. He is now Alberta's chief medical examiner.***
***(Ryan Hicks/CBC)***

***Alberta has chosen Manitoba's retired former chief medical examiner as the province's top pathologist. Dr. Thambirajah Balachandra was appointed through an order in council Thursday by Alberta Justice Minister Kaycee Madu. He will be***

கழகத்திற்குத் தெரிவாகினர். அதற்கெல் லாம் காரணம் அதன் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் என்று துணிவுடன் சொல்வேன். அவரில் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால், அவரைப் போன்ற அதிபர் கிடைத்ததினால்தான் நான் இன்று நல்ல நிலையில் இருக்கின்றேன். 'இதனை இதனால் இவன் முடிக்கும்' என்ற திருக்குறளை நன்குணர்ந்தவர் போல் அவர் செயல்பட்டார்.

இன்னென்ன மாணவன் இன்னெனதிற்குத் தகுதியானவன் என்பதைக் கணித்துப் பல மாணவர்களின் நல்வாழ்விற்குக் காரணமானார்.

அப்பொழுதெல்லாம் 'ரீயூசன்' என்ற ஒருமுறை இல்லை. பள்ளிக்கூட ஆசிரியர்களின் உழைப்பும் மாணவர் களின் கடும் முயற்சியுமே அக்காலத்தவர் களின் முன்னேற்றத்திற்குக் காரணமாயின.

ஒரு தடவையிலையே வைத்தியத் துறைக்குத் தெரிவானேன். படிப்பு முடிய ஒரு சிங்களக் கிராமத்தில் வேலை. ஏற்கனவே எனக்கு கொஞ்சம் சிங்களம் தெரியும். எனவே சிங்கள இடமும் எனக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை. சிங்களம் நன்றாகப் பேசத் தொடங்கி விட்டேன். கொஞ்சநாளில் தமிழும், சிங்களமும் எனக்கு ஒன்றுபோல் இருந்தது.

ஒரு தமிழனாகவோ அல்லது சிங்களவனாகவோ என்னை உணராமல் ஒரு வைத்தியனாகவே என்னை உணர்ந்து பணிசெய்த நாட்கள் அவை.

எனக்கு கொழும்புக்கு மாற்றம் வந்தது. அங்கு ஒரு சிங்கள வைத்தியரின் கீழ் வேலை செய்தேன். அப்போதுதான் 1983ஆம் ஆண்டு தமிழர் இன அழிப்பு நடந்தது.

திடீரென்று எனது வைத்திய அதிகாரி என்னை அழைத்து சிறைச்சாலைகளில் தமிழ் கைதிகள் கொல்லப்பட்டு இருக்கின்றனர். உடல்கூறு பரிசோதனைக்கு நீ போக வேண்டும் என்றார்.

எனக்கு பெரிய மன நெருக்கடியாக இருந்தாலும், கடமை பெரிதென சென்றேன். அங்குபோய் அக்கொடுமை யைப் பார்த்தபோது, இலங்கையில் மனிதனாகப் பிறந்ததிற்கே வெட்கப்பட்டேன்.

இரவு 9 மணிபோல் போனேன். விடியிறதுக்கு முதல் 36 உடல்களுக்குப் பரிசோதனையை முடிக்க வேண்டும். பரிசோதனைகளை செய்தபோதே பெரும் பாலான கைதிகளின் கை விரல்கள் பெரிதாகக் காயம்பட்டு முறிந்து இருந்தன.

என்னுடைய அதிகாரிக்கு அதை தொலைபேசியில் சொன்னேன். எல்லா வற்றையும் புகைப்படம் எடுக்கும்படி சொன்னார். நான் அவர் கூறியபடியே செய்தேன்.

பெரிதாக மனமும் உடலும் களைத்து, எல்லாம் முடிந்து வெளியில் வரும்போது அங்கு நின்ற ஒரு சிங்களக் கைதி சொன்னார், இன்று இரவுக்கு எஞ்சிய பேரைக் கொல்லத் திட்டமிடுகிறார்கள். உங்களால் ஏதாவது செய்ய முடியுமா என்று. என்னுடைய அதிகாரியை நான் அழைத்து இந்த விடயத்தை சொன்ன போது, அந்த விடயங்களில் தலையிடுவது எங்கள் வேலையில்லை - என பேச்சை நிறுத்தினார்.

இந்த அநியாயங்கள் எல்லாம் நடந்து இரண்டு, மூன்று நாட்களில் என்னுடைய அதிகாரி எனக்கு ஒரு தகவலை தந்தார். நாட்டின் அதிபராக இருந்த J.R. ஜெயவர்த்தனா தன்னை அழைத்து ஏன் புகைப்படம் எடுத்தீர்கள் என சத்தம் இட்டார். அது எங்கள் படிப்பிற்குத் தேவை. இது ஒரு வழமை என்று சொன்னேன். அவர் உம்முடைய உதவியாளர் தமிழரோ எனவும் விசாரித்தார்.

நான் பயப்படத் தொடங்கினேன். நான் பயப்பட்ட மாதிரி என்னை சிலர் பின் தொடரத் தொடங்கினார்கள்.

(தொடரும்------)














# வரலாறு முக்கியம்! தமிழ்நாட்டில் அழியும் பழங்கால கோவில் சித்திரங்கள்

தளவாய் சுந்தரம்

தமிழ்நாட்டில் பழங்காலக் கோவில்களின் சுவர்களிலும் விதானங்களிலும் வரையப்பட்டிருக்கும் சித்திரங்களைப் பார்த்திருப்பீர்கள். பெரும்பான்மையானோர் சாமிப் படங்கள் என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு கடந்திருப்பர். ஆனால், அவை சாமிப் படங்கள் மட்டும் இல்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம் முன்னோர் எப்படியிருந்தனர், அவர்கள் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது என்பதற்கான வரலாற்று ஆதாரங்களும்கூட. முற்காலத் தமிழரின் கலைப் பொக்கிஷங்கள். தற்போது போதிய பராமரிப்பு இல்லாததாலும், அந்தச் சித்திரங்களின் வரலாறு தெரியாமல் அதன்மேல் வெள்ளை அடித்து விடுவதாலும், இன்று கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது, அப்பொக்கிஷங்கள்!

"சித்திரக் கலையில் மியூரல்ஸ் என்றால் சுவரோவியங்கள் அல்லது சுவர்ச் சித்திரங்கள். கோவில்களிலும் குகைகளிலும் வரையப்பட்டுள்ள பழங்கால சுவரோவியங்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு, இந்திய அளவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. முதலிடத்தில் ராஜஸ்தான் இருக்கிறது. 140க்கும் மேற்பட்ட தமிழ் நாட்டுக் கோவில்களில் மேல் உட்கூரையிலும் பிரகாரச் சுவர்களிலும் சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளன. பல்லவர்கள், விஜயநகர ராயர்கள், நாயக்கர்கள், பாண்டியர்கள், சோழர்கள், சேரர்கள் என்று கிட்டத்தட்ட ஏழாம் நூற்றாண்டில்



தொடங்கி 17ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டத்தைச் சேர்ந்தவை அந்த ஓவியங்கள். கிட்டதட்ட ஆயிரம் வருடத்துக்கும் மேலான சரித்திர முக்கியம் வாய்ந்தவை.

இந்தியாவின் தொன்மையான சுவரோவியம் அஜந்தா, எல்லோரா குகைகளில் இருப்பவைதான். இவை தோராயமாக கிமு 3ஆவது நூற்றாண்டைச் சேர்ந்தவை. அஜந்தாவில் இருந்து சுவரோவியங்கள் வடக்கிலும் தெற்கிலும் பல நூற்றாண்டுகளாய் பரவியுள்ளது. முக்கியமாக புத்த, சமண மதத்தின் பரவலை சார்ந்து இது நிகழ்ந்துள்ளது. தமிழ்நாட்டு சுவரோவியங்களில் தொன்மையானது, பல்லவர்களின் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் சுவரோவியங்கள்'' என்கிறார், சென்னை ஐஐடி இணைப் பேராசிரியர் அருண் நரசிம்மன்.


ஆனால், அஜந்தா, எல்லோராவுக்கு முன்பிருந்தே தமிழர்களிடம் நல்ல ஒரு சித்திர மரபு இருந்தது என்கிறார், ஓவியரும் ஆய்வாளருமான காந்திராஜன்.



"2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஓவியக் கலை வரலாறு நமக்கு இருக்கிறது. பரிபாடல் உட்பட பல பழந்தமிழ் இலக்கியங்களில் அக்கால ஓவியங்கள் பற்றி குறிப்புகள் உள்ளன. தமிழக ஓவியங்களில் மிகப் பழமையானவை பாறை ஓவியங்களே. அவை, கிமு 500க்கு முற்பட்ட, அதாவது இன்றிருந்து 2500 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தவை. கரிக்கியூர், கொணவக்கரை, கீழ்வாலை, மாவடைப்பு, செந்தவரை, ஆலப்பாடி உட்பட பல இடங்களிலும் தமிழ் நாட்டில் பழங்கால பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதன்பிறகு, கிமு 100க்கும் கிபி 250க்கும் இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்த சங்க இலக்கியங்கள் முழுவதிலும் மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடைய ஓவியங்கள் பற்றி பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அறை முழுக்க ஓவியம் வரையப்பட்ட சித்திரமாடம் இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் ஓர் ஊர் வாசலில் வரையப்பட்டிருந்த சித்திரங்கள் பற்றி குறிப்பு வருகிறது. புத்த சமண சமயங்களைச் சேர்ந்த மடங்களில், அவர்களது சமயச் சடங்குகளை விவரிக்கும் ஓவியங்கள், சமயத் தலைவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகளை விளக்கும் ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன. சுட்ட செங்கல்லால் கட்டப்பட்ட அக்காலக் கட்டிடங்களோடு சேர்த்து அந்த

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# வாழ்வின் அர்த்தம் - நீ பெரியவனாகும் போது யாராக இருக்க விரும்புகிறாய்?




இந்தக் கேள்வியை எதிர்கொள்ளாத சிறு வயதே இல்லை எனலாம். பெரும்பாலும் இதற்கான பதில் வைத்தியர், ஆசிரியர், விஞ்ஞானி, தொழிலதிபர் என்றேயிருக்கும். இந்தவிதமான பதிலை எதிர்பார்த்தே கேட்பவரின் மனநிலையும் இருக்கும்.

ஐரோப்பாவில் உள்ள பள்ளியில் இந்தக் கேள்வியை ஜோன் லெனன் என்ற சிறுவனிடமும் அவர் ஆசிரியர் கேட்கிறார். ஜோன் நீ பெரியவானாகும் போது யாராக இருக்க விரும்புகிறாய். சட்டென்று அந்த மாணவன் சொல்கிறான் நான் மகிழ்ச்சியானவனாக இருப்பேன்.

அந்தப் பதிலை எதிர்பார்க்காத ஆசிரியர் மீண்டும் அவனிடம் கேட்கிறார் ஜோன் நீ என் கேள்வியை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நான் என்ன கேட்கிறேன் என்றால்;

அவர் சொல்ல வந்ததை முடிக்கு முன் அவரை குறுக்கிடும் அந்தச் சிறுவன் மிக தெளிவாக தலை நிமிர்ந்து சொல்கிறான்.. இல்லை மேடம் நீங்கள் தான் சரியாக வாழ்க்கையை புரிந்து கொள்ளவில்லை. அதனால் உங்கள் கேள்விக்கான என் பதிலின் அர்த்தம் உங்களுக்கு புரியவில்லை.

இப்போது அந்த ரீச்சருக்கு ஜோன் என்ன சொல்ல வருகிறான் என்பது நச்சென்று புரிகிறது. 'தான்' யாராக விரும்பினாலும் அதன் குறிக்கோள் 'தான்' மகிழ்ச்சியாக இருத்தலும், பிறரை மகிழ்ச்சிப் படுத்துவதும் தானே என்பதை உணர முடிகிறது. உடன் அவர் ஜோனை அருகில் அழைத்து அவன் சொல்ல வந்ததை மற்ற மாணவர்களுக்கும் புரியும்படி எடுத்துச் சொல்லி அவனைப் பாராட்டி மகிழ்கிறார்.

மகிழ்ச்சியாக இருப்பதே வாழ்க்கையில் மிக முக்கியமானது என வாழ்வின் உண்மையான அர்த்தத்தை தனக்குள் விதைத்த, தன்னை வெற்றியாளனாக உருவாக்கிய தன் தாயை பின்னாட்களிலும் நன்றியோடு நினைவு கூரும் 'ஜோன் லெனன்' உலகப் புகழ் பெற்ற பீட்டில்ஸின் (Beatles - English rock band) இணை நிறுவனர்.

பொதுவாக எல்லோருமே 'தான்' மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால் அதற்காக வாழ்க்கையில் நாம் எதைத் தேடி ஓடுகிறோம் என்பதில்தான் குழம்பிக் கொள்கிறோம்.

நான்கு பேர் சேர்ந்து ஒருவரை இரயிலில் பயணம் அனுப்ப சென்றனராம். பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு அவர்கள் மகிழ்ச்சியமாக பேசிக்கொண்டே நின்றதில் இரயில் கிளம்பும் போதுதான் கவனிக்கின்றனர். உடனே பரபரவென்று மற்ற நான்கு பேரும் ஏறி விட்டனர் யாரை அனுப்ப வந்தார்களோ அவர் மட்டும் தனியாக பிளாட்பாரத்திலே நின்று கொண்டிருக்கிறார்.

இப்படித்தான் வாழ்க்கையிலும் நடக்கிறது, மகிழ்ச்சி ஒன்றிற்காகத்தான் அத்தனை முயற்சியும் எடுக்கிறோம். ஆனால் நம் பரபர ஓட்டத்தில் மகிழ்ச்சியை விட்டு விட்டு மற்றதை நோக்கி ஓடி பெரு மூச்சு விட்டுக் கொள்கிறோம். நம் வாழ்க்கைக்கு தவறான அர்த்தம் கற்பித்து மன அழுத்தத்திற்கு ஆளாகிறோம்.



எது உங்களை அழகான முறையில் முன்னேற்றக் கூடும். வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாக மாற்றக் கூடியது எது? என்ற கேள்விக்கு கடந்த 21 ஆண்டுகளில் உலகளாவிய வகையில் நடந்த ஆய்வுகள் பலவும் நமக்கு சொல்லக் கூடியது மகிழ்ச்சிக்கென்ற ஒரே எடுத்துக்காட்டு எல்லாவற்றிற்கும் பொருந்தாது. ஒருத்தரை மகிழ்ச்சிபடுத்தக் கூடிய ஒன்றும் வேறு ஒருத்தருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றும் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கக் கூடும்.

ஒருத்தருக்கு பாதுகாப்பான வேலைதான் மகிழ்ச்சி தரும் என்றால் வேறொருவருக்கு ஆபத்தான வேலைகளை எடுத்துத் துணிவாகச் செய்வதுதான் மகிழ்ச்சியை தரும். நேற்று உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒன்று இன்று நினைத்தால் உங்களுக்கு வேடிக்கையானதாக இருக்கலாம். இன்று உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்று நாளை வேறுபடலாம். இதுதான் உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் என்பதற்கு தனியான செயல் முறை (single recipe) என்று ஒன்று இல்லை. ஏனென்றால் உங்கள் மகிழ்ச்சி என்பதை நீங்கள் பொருளில் தேடினால் அது ஒரே விடயத்தை சார்ந்து இருப்பதில்லை.

ஆனால் மகிழ்ச்சியான மன நிலையுடன் இருக்கும் எல்லோரிடமும் இருக்கக் கூடிய ஒரு பொதுவான விடயம் என்னவென்றால், அவர்கள் சமூகத்தோடு நல்ல முறையில் உறவுடன் இருக்கின்றனர். உற்றார் உறவினர் சுற்றம் நட்புடன் சுமுகமாக இருக்கின்றனர். சமூகத்தோடு ஒன்றிய நல்ல உறவு இல்லாதவர்களால் மகிழ்ச்சியோடு இருக்க முடியாது. அவர்களிடம் ஏதோ ஒரு விரக்தி நிலை, விடுபட்ட நிலை இருக்கும் என்கிறது ஆய்வுகள்.

சிறு குழந்தைகளை பார்த்திருப்பீர்கள், அவர்கள் விளையாடுவதற்கு துணை இருந்தால் மிக்க மகிழ்ச்சியோடு சுறுசுறுப்பாக இருப்பர். அப்படி ஒருவரும் இல்லாத சூழலிலும் தன்னுடைய விளையாட்டுப் பொருட்களையே, தன் விளையாட்டு பொம்மையையே ஒரு நட்பாகப் பாவித்து அவற்றுடன் பேசிக் கொண்டும் கொஞ்சிக் கொண்டும் தானே ஒரு நட்பையும் சுற்றத்தையும் குடும்பத்தையும் உருவாக்கிக் கொண்டு குதூகலமாக விளையாடுவர். கற்பனையில் ஒரு நட்பை உருவாக்கிக் கொண்டு அவர்களுடன் சிரித்து மகிழ்ந்து குதூகலிப்பர்.

சில பல குறைகள் இருப்பதாக தனக்குள் புதைந்து போகக் கூடியவர்களையும் பிறரோடு சிரித்துப் பேசி மகிழச் செய்யும் போது அவர்கள், தங்கள் குறைகளையும் பிரச்சினைகளையும் மறந்து மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்கிறது ஆய்வுகள்.

ஆனால் நல்ல மனநிலையில் இருக்கும் போது பழகக்கூடிய உறவுகளையே இன்று நாம் நிறைத்து வைத்திருக்கிறோம். ஏதாவது மன வருத்தம் ஏற்பட்டால் யாருக்கும் அது தெரிந்து விடக்கூடாது என்று ஒதுங்கிக் கொள்ளவே முயல்கிறது மனம்.

உங்களுக்கு தெரியுமா? மன அழுத்தம் என்றால் என்ன என்பதற்கு மனஇயல் அகராதியில் பதினெட்டு விதமான அர்த்தங்கள் கொடுத்திருக்கும். ஆனால் மகிழ்ச்சி என்றால் என்ன என்பது பற்றி அந்த அகராதியிலேயே இருக்காது. இது நமக்கு எவ்வளவு பெரிய முக்கியமான விஷயத்தை எடுத்து சொல்கிறது என்று பாருங்கள். மகிழ்ச்சியான மனநிலையோடு இருப்பவர்களுக்கு மனஅழுத்தத்திற்கு இடமில்லை என்ற பெரும் புரிதலை இது ஏற்படுத்துகிறது.

முன்பு மனஇயலில், உங்களுக்கு என்ன பிரச்சினை, எது உங்களிடம் சரியாக இல்லை அதை எப்படி சரி செய்வது என ஒருவரின் மனதில் இருக்கும் எதிர்மறையான எண்ணங்களை மனோதத்துவ முறையில் அணுகி அவற்றை களைந்து விடும் முறையே இருந்தது. ஆனால் இப்போது அதற்குப் பதிலாக நேர்மறை எண்ணங்களை மனதில் விதைத்து அதன் தாக்கத்தை அதிகப்படுத்தும் நேர்மறை உளவியல் என்ற புதிய அணுகுமுறை வந்துவிட்டது. இருளை அள்ளி வெளியில் வீசுவதற்குப் பதில் ஒரு விளக்கை ஏற்றி இருளை நீக்கும் இவ் அணுகுமுறை உங்கள் நிறைகளை பார்த்து அதை மேலும் மேலும் அதிகரிக்கும் யுக்திகளை கையாளும்.

இந்த முறையை நாம் ஒவ்வொருவரும் புரிந்து அதை நம் அன்றாட வாழ்க்கையில் கையாள முயன்றால்... ஒவ்வொருவரிடமும் இயல்பாக இருக்கக் கூடிய அன்பும், கனிவும், பாசமும், நன்றியுணர்ச்சியும், புரிதலும், பெருந்தன்மையும் அழகான முறையில் போற்றப்பட்டு இன்னும் அதிகரிக்கும். அது மன அழுத்தம் என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் இனிமையான மகிழ்ச்சியான உள்ளத்தையும் கறை இல்லாத எண்ணங்களையும், நல்ல உறவுகளையும் வாழும் திருப்தியையும் தரும்.

மற்றவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளவே முடியாமல் சமூகத்தோடு ஒன்றாமல் இருப்போர் மகிழ்ச்சியற்றுத் தவிக்கின்றனர் என்கிறது ஆய்வுகள்.

மகிழ்ச்சியான மனநிலை நல்ல உறவுகளைத் தரும். நல்ல உறவுகள் மகிழ்ச்சியான மனநிலையை தரும்.

மனிதர்களிடம் உண்மையான அன்பு இல்லாமல் மேலோட்டமாகப் பழகும்போது



அவர்கள் கேட்டது எல்லாம் கிடைத்தாலுமே அவர்கள் மனம் வெறுமையாகவே இருக்கிறது. உண்மையில் உணர்வுபூர்வமான உறவுகளே மனதில் ஒரு பாதுகாப்பை ஒரு வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அதை உணர்ந்து கொண்டால் மகிழ்ச்சி மனதில் என்றும் இருக்கும்.



## BASEMENT FOR RENT

***MARKHAM & DENISON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.809.3912**

***MARKHAM & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.680.8807

***MARKHAM & STEELES***
1 bed room bsmt for rent. No sep. entrance. Seniors or couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-219-7704**

***NEILSON & FINCH***
1 bedrooms bsmt for rent. Sep.entrance. Close to Malvern mall & Eraa Supermarket. Single, couple preferred. Avail. August 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.656.1131**

***VICTORIA PARK & LAWRENCE***
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Closet to TTC, Park & Hindu temple. Ladies preferred.
**416.288.9575 / 647.762.9575**

***NEILSON & SHEPPARD***
3 bedrooms bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு:**416.896.7250**

***ROSELAND & SALEM***
1bedroom walk-out bsmt for rent. 1 full washroom &1 parking. Avail. immediately.
**438.879.6064 / 514.965.6064**

***WARDEN & FINCH***
1bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Close to all facilties. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

***BRIMLEY & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry, parking. Couple preferred Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.884.5337**

**MORNINGSIDE & FINCH**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & Parking. No Pets & No Smoking. Avail. July 01, 2022.
**416.735.4240 / 416.729.9858**

***MORNINGSIDE & MCNICOLL***
2 Bedroom newly renovated bsmt for rent. Also 3 bedrooms main floor for rent . Laundry. Avail. August 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.761.6294**

***MARKHAM & DENISON***
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Small family or couple preferred. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.740.7438**

32 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

***BOVAIRD & DIXIE (Brampton)***
2 bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking. Close to all facilities. No smoking/pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.241.8947**

***MIDDLEFIELD & HIGHGLEN***
***1 bedroom bsmt for rent***
***Sep. entrance, 1 parking, laundry***
***Avail. immediately***
தொடர்புகளுக்கு: **416.823.7576**

***NEILSON & FINCH***
2 bedroom bsmt for rent, full bathroom, sep. entrance and 1 parking. Wifi & utilities included. Close to TTC. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு:**416-625-6733**

***MORNINGSIDE & MCNICOLL***
1 bedroom bsmt for rent. Sep. entrance parking. Close to school, TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.515.1631**

***KENNEDY & EGLINTON***
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: 674.309.2480

## ROOM FOR RENT

***MIDDLEFIELD & FINCH***
One room for rent in a 2 bedroom bsmt. Sep. entrance, parking, laundry. Working male preferred. Avail. immediately.
***416-502-3048 / 416-409-5286***

***CHINGUACOUSY & STEELES (BRAMPTON)***
1room for rent in a house main floor. Ensuite washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.880.4829**

***MCCOWAN & FINCH***
Master bedroom in a condo. Washroom inside the room. Shared kitchen & laundry. Renting for female only.
தொடர்புகளுக்கு: **647.291.9437**

***WARDEN & FINCH***
1room for rent in a house. Parking , laundry, cable, internet & utilities. Students / Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.499.2254**

***BRIMLEY & LAWRENCE***
1 room for rent in a 3 bedroom bangalow house. You will share the house with only one person. Avail: immediately
தொடர்புகளுக்கு: **416.648.1873**

## ROOM FOR RENT

***SCARB.GOLF CLUB RD & LAWRENCE.***
1 Room for rent in a basement Shared kitchen and washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

***NEILSON & SHEPPARD***
1 bedroom bsmt for rent. Room also available. Couple or female preferred. Close to Malvern Town Center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.875.4257**

***MARKHAM & ELLESMERE***
Room for rent in the two bedroom basement. Avail. August 01, 2022. Wifi available.
தொடர்புகளுக்கு : **647.996.6977**

***WARDEN & FINCH***
One room for rent in a 3 bedroom bsmt. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 704 .4444**

**NEILSON & MCLEVIN**
One room for rent in a basement. Laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647.766.7779**

***BROCK & KINGSTON***
1 room for rent in main floor. Shared kitchen. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

***DUNDAS & THICKSON***
One room for rent in Whitby . Includes high speed internet, laundry & shared kitchen. Close to Go Train and all other facilities.
தொடர்புகளுக்கு: **647.527.9922**

***SCAR. GOLF CLUB & ELLESMERE***
Rooms for rent with food. Seniors Preferred.
***Please Call : 647.667.0482***

## BASEMENT FOR RENT

***MEADOWALE & SHEPPARD***
2 bedroom bsmt for rent. Laundry, parking & internet. No smoking & no pets. Close to hwy 401, TTC, Centennial College & U of T (Scarborough). Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.821.9185**

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

***BELLAMY & LAWRENCE***
3 Bedroom house for rent. Parking included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## BASEMENT FOR RENT

***STAINES & STEELES***
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to all facilities. Avail. immediately.
***416.519.9441/ 647.625.4876***

## BASEMENT FOR RENT

***WESTNEY & KINGSTON RD.***
1 bedroom bsmt for rent. Large windows &1 parking. Close to Go train, schools & shopping center. 5 mins to hwy 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.605.0109**

## HOUSE / BASEMENT FOR RENT

***WARDEN & ELLESMERE***
3 bedroom house for rent. Parking included. Aslo 2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. No pets & no smoking. Avail. immediately.
**647.808.0406 / 437.992.6595**

## BASEMENT FOR RENT

***HARMONY RD. & TAUNTON RD.***
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking and free wifi. Minutes to Durham college and mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.504.2924**

## BASEMENT FOR RENT

***MCCOWAN & EGLINTON***
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable & utilities. Close to all facilities. No pets & no smoking. Students or small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.624.8641**

## BASEMENT FOR RENT

***TAPSCOTT & MCLEVIN***
1 bedroom bsmt for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.3535**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

**BASEMENT FOR RENT**

**MCCOWAN & HIGHGLEN**

2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to all facilities. Avail. August 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.972.7620**

**BASEMENT FOR RENT**

**MARKHAM & 14th AVE.**

2 bed room bsmt for rent. 1 washroom, Sep. entrance. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.296. 7932**

**BASEMENT FOR RENT**

**NEILSON & FINCH**

1 bedroom bsmt for rent. Sep. entrance & free wifi. Very convenient location with close by bus stop, schools, grocery & convenience stores. Avail. immediately.

**Contact: 647.468.8403**

**BASEMENT FOR RENT**

**HIWAY 401 & BROCK RD.**

2 bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking & utilities. Close to all facilities. 2 mins. walk to Walmart. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.836.6009**

**BASEMENT FOR RENT**

**MORNINGSIDE & MCNICOLL**

2 bedroom bsmt. for rent. Sep entrance, laundry & parking. Close to TTC and other facilities. Avail. August 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.720.5933**

**HOUSE FOR RENT**

**NEILSON & SHEPPARD**

3 Bedroom house for rent. 2 full washrooms in upstairs. Also 2 bedrooms & 1washroom in the bsmt. Sep. entrance. Avail. July 01, 2022.

தொடர்புகளுக்கு: **416.569.5319**

**ROOM FOR RENT**

**MORNINGSIDE & MCNICOLL**

1 room for rent in a 2 bedroom bsmt. Sep. entrance, no parking, laundry & internet. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.371.5444**

**ROOM FOR RENT**

**MCCOWAN & FINCH**

1 Room for rent in a bsmt. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.825.0566**

**ROOM FOR RENT**

**MIDDLEFIELD & FINCH**

One bedroom for Rent. Female Student preferred. Avail. immediately. Close to all facilities.

தொடர்புகளுக்கு: **416.953.2597**

**ROOMS FOR RENT**

**ROSSLAND & SALEM**

Rooms for rent. Free transportation for students to the Oshawa Campus.

தொடர்புகளுக்கு: **416.566.9411**

**HOUSE FOR RENT**

**9th Line & 16th Avenue**

3 Bedroom house for rent. 2 wash rooms, 3 parking spots & laundry. No pets. Close to Stouffville Hospital. Avail. July 01, 2022.

தொடர்புகளுக்கு: **647. 205.7194**

**HOUSE FOR RENT**

**WESTNEY & KINGSTON RD.**

3 Bedroom Bungalow house for rent. 3pc washrooms, kitchen, separate laundry, 2 bedroom bsmt, Sep.entrance, 3pc washroom. Avail. August 01, 2022. Close to Costco & all Shopping mall.

தொடர்புகளுக்கு: **416.560.4152**

**ROOM FOR RENT**

**KENNEDY & EGLINTON**

1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately

**416.857.5252 / 416.752.4444**

**ROOM FOR RENT**

**MCCOWAN & DENISON**

One bedroom for Rent. All inclusive. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.522.3314**

**BASEMENT FOR RENT**

**MORNINGSIDE & SEWELLS**

1 bedroom bsmt for rent. Laundry & parking. Small / working family or female students or senior family preferred. No pets or no smoke. Close to HWY 401, mall, TTC & university. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416-729-4939**

**வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட**

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்:

**647.402.2937**

**HOUSE/BASEMENT FOR RENT**

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

**STAINES & MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

**HOUSE FOR RENT**

**CHURCH & ROSSLAND**

4 Bedroom two story detached house for rent. 2 1/2 washrooms & 2 parking. Avail. August 01, 2022. Close to public transportation & park.

தொடர்புகளுக்கு: **416.509.7247**

**CONDO. FOR SALE**

2 Bedroom ***Condo.*** for sale. Close to transportation, schools & community center. Very convenient location. Price negotiable.

***Please Call: 416.648.7283***

**வாடகைக்கு**

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**

**House, Condo, Basement**

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

**HOUSE / CONDO. FOR RENT**

4 bedroom brand new ***house*** for rent in **PETERBOROUGH**. 2 1/2 washroom & a parking also available.

3 bedroom ***Condo.*** for rent at ***WARDEN & FINCH.*** Ground floor, 2 washrooms. Close to TTC , shopping & all other facilities. Seniors preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **437.247.9055**

**BASEMENT FOR RENT**

**BROCK & KINGSTON**

1 bedroom, 1 full washroom and a parking also available. Sep. entrance. walking distance to Pickering Town centre. Close to HWY 401 & all shopping facilities. Suitable for Small family or couple. No pet & No smoking. Avail. immediately

தொடர்புகளுக்கு: **416. 731.8542 / 416.301.4783**

**HOUSE FOR SALE / RENT**

**HARMONY & HWY 401 ( OSHAWA)**

Newly renovated 3 bedroom house for sale or rent. 2 full washrooms, Parking & laundry . It has 3 bedroom walk- out bsmt with 2 full washrooms. We can help to get First & Second Mortgages. ***Please Contact : 416.305.0858***

**ROOMS FOR RENT**

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses). Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: 416.880.5952

## TUTORING

***Online Math / Coding Tutor Available***

GR 9-12 Math and computer science classes by University student. Teaching Functions, Calculus, Python and Java.

தொடர்புகளுக்கு: **647.898.3244**

## PIANO FOR SALE

Heintzman Piano upright
Included Bench
Polished black colour model.
Tuning 2022
Moving sale, price negotiable.

***Pl. Call: 416.729.1789***

## மணமகன் தேவை

31 வயது கணவனை இழந்து 8 வயது மகனுடன் இலங்கையில் வாழும் இளம் பெண்ணுக்கு வெளிநாட்டில் வாழும் துணை ஒருவரைத் தேடுகிறோம்.

***077.605.4756 Viber***
***076.326.2163 Viber***

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarboroughஇல் அமைந்துள்ள புடவைக்கடைக்கு விற்பனை மற்றும் தையல் பகுதிகளுக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
FULL TIME / PART TIME

**647.779.2358 / 647.667.0479**

## வேலைக்கு ஆட்கள் தேவை

***NEWMARKET & AURORA*** பகுதியில் Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு:

***647.763.0850***

## HELP WANTED

***MARKHAM***இல் உள்ள தமிழ் உணவகத்திற்கு அனுபவமுள்ள Lady cashier, kitchen helper, cook தேவை. தொடர்புகளுக்கு:

**647.205.9243**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## HOUSE FOR RENT

***SIMCOE ST. & BRITANNIA (OSHAWA)***

3 story townhouses with 3 bedrooms & 2.5 washroom lease in Oshawa in peaceful neighborhood . Close to all amenities, stores, public transit, Oshawa university & Durham college close by and 500m Costco is there. They also have banks nearby gas stations Tim Horton's, Starbucks, LCBO and fresh Co behind the house. This house is two years old and the rent amount $2,700 plus bills.

***Please Call - Kumar: 416.456.3843***

## AZ DRIVERS WANTED

Seeking for experienced AZ drivers for CANADA & USA.

***Requirements:***
- ***Minimum 3-4 years of experience.***
- ***Cross Border experience***
- ***Good Communication Skills***
- ***Clean Abstract***

***Please Contact - 416 – 835 – 6701***

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் நடமாடக்கூடிய முதியவர் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. அனுபவம் தேவை இல்லை.

***Live in caregiver needed.***
***Experience not needed.***

தொடர்புகளுக்கு: **647.540.9520**

## SERVER & COOK WANTED in Ajax & Oshawa

We are Looking for experienced cook & server for popular Canadian restaurants in Ajax & Oshawa.
Full time & part time available.
சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

Please Call - Mano: ***647.283.8222***

## USED CARS WANTED

USED TOYOTA CARS,
VANS WANTED.
ANY CONDITION.

Call: **437.688.6305**

## CLEANING JOB

***MAJOR MACKENZIE & MARKHAM***

பகுதியில் துப்பரவுப் பணிக்கு ஒருவர் தேவை. 7 நாட்கள் வேலை. வேலை நேரம் அதிகாலை 5 மணி முதல் 8 மணிவரை. அனுபவமுள்ள ***machine operator*** தேவை. தொடர்புகளுக்கு:

**647.701.9809**

## வேலைக்கு ஆட்கள் தேவை

### *SKILLED GENERAL HELPER NEEDED*

We, ***Niva Care Ltd.*** are looking for a general helper to install / repair doors & windows.
FULL TIME & PART TIME JOB AVAILABLE.

தொடர்புகளுக்கு: ***416.671.5552 / 647.729.2185***

## COOK / ROTTY MAKERS WANTED

***Ajax***இல் அமைந்துள்ள ***ROTTIES & ROLLS Restaurant***இல் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
Full time & part time jobs available.
Please send your resumes to: ***jeg21@hotmail.com***

தொடர்புகளுக்கு: 289.818.5077

## வேலைக்கு ஆட்கள் தேவை

***NIAGARA FALLS*** பகுதியில் **house keeping** வேலைக்கு ஆட்கள் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு:

**niagarafallsinquiries@outlook.com**

## COOK / KITCHEN HELP WANTED

***VICTORIAPARK & HWY 401*** (Scarborough)இல் அமைந்துள்ள ENGLISH PUBக்கு Experienced LINE COOK, COOK HELP & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.

Please contact at ***416-566-9994***

## வேலைக்கு ஆட்கள் தேவை

***CANADIAN RESTAURANT IN STOUFFVILLE***

அனுபவமுள்ள FULL TIME COOK தேவை.
நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 416.274.2426

## JOB JOB JOB

துப்பரவுப் பணிக்கும் மேற்பார்வையாளர் வேலை செய்வதற்கும் Cleaning company ஒன்றுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வாகன வசதி உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
Looking for a supervisor & employees for a cleaning company.

தொடர்புகளுக்கு: ***647.400.7101***

## HELP WANTED

East York (1061 Gerrard Street East) இல் அமைந்துள்ள Convenience Store ஒன்றுக்கு Store Clerk வேலைக்கு அனுபவமுள்ளவர் உடனடியாகத் தேவை. *Looking for a store clerk with convenience store experience for a corner store located in East York.* நியாயமான சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:

**416.465.6239 (*Store*) 437.216.4287 (*Cell*)**

## JOB JOB JOB

ஸ்காபரோவில் **MARKHAM & EGLINTON** இல் வாழும் நடமாடக்கூடிய முதியவர் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு உதவியாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **416.267.4650**

## RENOVATION

- *Plumbing*
- *Painting*
- *Electric*
- *Tiles*
- *Basement*
- *Hardwood*
- *Laminating*
- *Kitchen*
- *Landscaping*
- *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

## HELP WANTED / Restaurant & Bar

**ROSSLAND RD E. & GARDEN ST. (WHITBY)**

***Experience Required*:**
- Front/Back Manager
- Line Cook (Chef)
- Bartender / Waiter

***No Experience* :**
- Kitchen Helper
- Food Runner
- Dishwasher

**CALL: 647-802-7021**

*Mention Vlambaram AD when calling*

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## HELP WANTED

***IVORY LAUNDRY*** in Scarborough. ( 21 Canadian Road)

Looking male employees for helping with cleaning and arranging customers stuffs. வாடிக்கையாளர்களின் பொருட்களை சுத்தம் செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் உதவுவதற்காக ஆண் வேலையாட்கள் தேவை. Female employees for packaging and arranging. பெண் பணியாளர்கள் packaging மற்றும் arranging செய்வதற்குத் தேவை.

***Please contact :(Tamil) 647.688.9805 / Direct contact: (Jackie) 647.628.2758***

## COOK WANTED

***RHINOS ROADHOUSE***

***5078 Rice lake Drive, Bewdley, Ontario.***

We are looking to join our team. Line cooks, prep cooks full time hours. We are open Monday to Sunday 8am to 9pm. Must be available weekend days nites.

***Please contact - Kodeeswaran : 289.244.8555***

## HEALTH CARE SERVICE

***Blood work and urine test will be done by our home visit services at your own place.***

உங்கள் வீட்டிலேயே இரத்தம், சலம் பரிசோதனை செய்தல் போன்ற மருத்துவ தேவைகளுக்கு அழையுங்கள்

***Uthayakumar - 416.201.1222***

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact : பிறேம்-647.835.5244**

## வேலைக்கு ஆட்கள் தேவை

***YOUNG & EGLINTON*** பகுதியில் அமைந்துள்ள ***THAI RESTAURENT***க்கு ***COOK & KITCHEN HELPER*** தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **647.831.2795**

## *CLEANING* வேலைக்கு ஆட்கள் தேவை

***Toronto Down Town (Church & Bloor Street)***

துப்பரவுப் பணிக்கு அனுபவமுள்ள 2 பேர் தேவை. Male and Female welcome.
வேலை நேரம் - காலை 8 மணி முதல் 4 மணிவரை. (Monday to Friday )
காலை 9 மணி முதல் 3 மணிவரை. (Week ends)

தொடர்புகளுக்கு: **SAM: 647.501.3108**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

***We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.***

உங்களது ***rooms , house or basement*** இனை சட்டரீதியாக ***University / College Students*** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**

***HomeLife Future Realty Inc. Brokerage***

## JOB JOB JOB

**MARKHAM & MCNICOLL**

**SCARBOROUGH**இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு Cashier வேலைக்குப் பெண் பணியாளர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு: **647.656.1416**

## கனடாவாழ் நுணாவில் மக்களின் கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும்

எதிர்வரும் ஆடி (July) மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணியிலிருந்து மாலை 6:00 மணிவரை கோவிட் 19 (COVID -19) சமூக இடைவெளியுடன் நடைபெறவுள்ளது. அனைத்து நுணாவில் மக்களின் வருகையை அன்போடு எதிர்பாரக்கின்றோம்.

இடம்:- Adams Park – Area B – 2 Rozell Road Scarborough, ON M3C 2L1.

மேலதிக தொடர்புகட்கு:-

அருள்-(416) 709-2783 கேதா-(416) 677-4707 சதீஷ்-(647) 505-1560

வெற்றி வந்தால் பணிவு அவசியம், தோல்வி வந்தால் பொறுமை அவசியம்.
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம், எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்.

Property Management

Unit #210 — 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

Brampton — Bramalea/Country Side — Semi–Detached
(3Brm + 3Bath) [$3,200/m]
Mississauga — Burnhamthorpe Rd/Confederation — Condo
(2+1Brm + 2Bath) [$3,700/m]
Stouffville— 10th Line/ Main St – Detached
(2Brm + 1Bath) [$1,800/m]
Stouffville— York Durham/Hoover Park – Detached
(4Brm + 3Bath) [$3,175/m]
Toronto — Ellesmere/Conlins — Bsmt
(2Brm + 1Bath) [$1,500/m]
Toronto — Bathurst/Lakeshore — Condo
(1Brm + 1Bath) [$2,300/m]
Toronto — Markham Rd/Painted Post Dr — Detached
(3Brm + 1Bath) [$2,600/m]

**Available for Rent**

Oshawa — Wilson Rd S/King St E – Detached
(3Brm +1Bath) [$2,600/m]
Whitby— Thickson/Manning – Detached
(23+1Brm +3Bath) [$2,600/m]
Pickering— Rosebank;Strouds Lane – Bsmt
(2Brm +1Bath) [$2,000/m]
Pickering— Whites Rd/Taunton — Town House
(3Brm +4Bath) [$3,200/m]
Ajax— Salem Rd/Rossland Rd/Audley Rd — Detached
(4Brm +3Bath) [$3,900/m]
Ajax— Church/Rossland Rd — Detached
(3Brm +3Bath) [$3,300/m]
Ajax— Westney Rd/Ravencroft — Detached
(3Brm +2Bath) [$2,600/m]

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா – 416.616.7278 Watson Property Management – 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.


# வரலாறு...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓவியங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. மிஞ்சியவை கோவில்களில் வரையப்பட்டிருந்த சித்திரங்கள்தான். அக்கால நாகரிகத்தைப் பற்றி தெரிந்துகொள்ள நம்மிடம் இன்று இருக்கும் ஆதாரம் இந்த ஓவியங்கள். கல்யாணம், மன்னர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தை, யுத்தம் போன்ற பல நிகழ்வுகள் இக்கோவில் சித்திரங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. திருப்புடைமருதூர் கோவில் சித்திரங்களில் டச்சுக்காரர்கள் கப்பல்களில் குதிரையை ஏற்றிவந்து இங்கு வியாபாரம் செய்யும் காட்சிகள் ஒவ்வொரு படிநிலையாக வரையப்பட்டுள்ளது” என்கிறார் காந்திராஜன்.

வேலூரில் இருந்து 30 கி.மீ. தூரத்திலுள்ள பனைமலை தளபுரீஸ்வரர் கோவில் சுவரோவியங்களைக் கண்டுபிடித்த டக்ளஸ் பாரட், அந்தச் சித்திரத்திலுள்ள ‘பெண்ணின் உருவம் கட்டுறுதி வாய்ந்த எலும்புகள் கொண்ட தென்னிந்தியப் பெண்ணின் உடலமைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு’ எனச் சொல்வதை சுட்டிக் காட்டும் காந்திராஜன், “கோவில் சித்திரங்களை வைத்து வரலாற்றை எழுதும் முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. அம்முயற்சி முன்னெடுக்கப்பட்டால் நமது வரலாற்றில் விடுபட்ட பகுதிகள் இன்னும் துலக்கமாகும்” என்கிறார்.

சரி, இவ்வளவு வரலாற்று முக்கியத்துவம் உடைய இந்த சித்திரங்கள் யாரால், ஏன் அழிக்கப்படுகின்றன?

“கோவில் ஓவியங்கள் அழிவுக்கு பெரும்பான்மை சம்பவங்களில் அரசாங்கமே காரணமாக இருக்கிறது. இரண்டாவது சுற்றுலாப் பயணிகள்” என்கிறார் காந்திராஜன். மேலும், “புனரமைக்கிறோம் என்ற பெயரில் 1996இல் மதுரையில் உள்ள



முக்கியமான கோவில் ஓவியங்கள் எல்லாவற்றையும் வெள்ளையடித்து மறைத்து விட்டனர். எதிர்ப்புகள் கிளம்பிய பிறகு அவற்றை மறுபடியும் வரைய முயற்சித்தனர். ஆனால், அப்பழைய செழுமையைக் கொண்டுவர முடியவில்லை. அந்த ஓவியங்களை மீண்டும் வரைவதற்கான நிபுணர்கள் நம்மிடம் இல்லை. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் கருவறைகளின் உட்புறத்தில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன. அவ்வப் போது நடைபெற்ற பழுது பார்க்கும் பணிகளால், அந்த ஓவியங்கள் சுண்ணாம்புச் சாந்தினால் மறைக்கப்பட்டு விட்டன. பனைமலை தளபுரீஸ்வரர் கோயிலில் எல்லாக் கருவறை உட்புற சுவர்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. தற்போது அவற்றின் அடையாளங்கள் மட்டும்தான் தென்படுகின்றன. இச்சித்திரங்களின் முக்கியத்துவம் பற்றிய அறியாத சுற்றுலா பயணிகள் கைக்கெட்டும் உயரத்தில் உள்ள சித்திரங்களில் தங்கள் பெயரை எழுதிவைக்கின்றனர். இதனால் இவை அழிவை நோக்கிச் செல்கின்றன” என்கிறார் அவர்.

சித்திரங்கள் அழிக்கப்படுவதை தடுப்பது எப்படி?



“இந்து மரபின் வலிமையே பக்தர்களைத் தொடர்ந்து தொடர்புகொள்ளும் அதன் ஆற்றலில்தான் உள்ளது. அதன் காரணமாகவே அது என்றும் இளமையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. கோயிலையும் அதன் பழுது பார்க்கும் பணியையும் அதன் நோக்கிலேயே காண வேண்டும். பழுது பார்ப்பதையும் புதுப்பிப்பதையும் சமய அனுபவத்தின் ஒரு பகுதியாக எண்ண வேண்டும். ஓவியம் சிதைவது தவிர்க்க இயலாதது. எல்லாக் கோவில்களுக்கும் பெரும் செலவுசெய்து பாதுகாப்பளிப்பது இயலாத ஒன்றாகும். ஆகவே, நன்கு அறிந்த அறிஞர்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஓவியங்களை ஆவணப்படுத்த வேண்டும். அவற்றைப் பரந்துபட்ட அளவில் பகிர்ந்துகொள்ள வேண்டும்” என்கிறார், தமிழக ஓவியங்கள் பற்றி ஆய்வு செய்துள்ள ஐ. ஜோப் தாமஸ். ஆனால், கலை ஆர்வலர்களோ பழுது பார்க்கும் பணியில் ஓவியங்கள் அழிவதைத் தடுக்க வேண்டும் என்கிறார்கள்.

“மற்ற நாடுகளில் பழைமைச் சின்னங்களுக்கு ரொம்பவே முக்கியத்துவம் தருகின்றனர். ஐரோப்பாவில் 12ஆம் நூற்றாண்டின் தெருக்களைக்கூட பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர். நம்மூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில் ஓவியங்கள் அழிவது மிகப்பெரிய துயரம்.



ஓவியங்களைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வை அடிப்படையில் இருந்து உருவாக்க வேண்டும். பள்ளிப் பருவத்தில் இருந்து குழந்தைகளின் மனதில் நம்முடைய பாரம்பரிய மதிப்பைப் பதியச் செய்ய வேண்டும். இந்த ஓவியங்கள், நம்முடைய முன்னோர்கள் நமக்காக விட்டுச்சென்ற அடையாளங்கள் என்று சொல்லிக்கொடுக்க வேண்டும். ஓவியங்களைப் பாதுகாக்கும் பணிகளை ‘கமிட்டி’ அமைத்து, அதனிடம் ஒப்படைக்க வேண்டும்” என்கிறார் ஓவியர் மருது.

வரலாறு மிக முக்கியம்!

# பிள்ளைகளால் மகிழ்ச்சியைப் பெறுவதில் குடும்பத்தின் செயற்பாடுகள் - நாடும் நடப்பும்


சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மனித சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கும் குடும்பம் மிகப்பழமை வாய்ந்த அமைப்பாகும். பிள்ளைகளை முதிர்ச்சி வாய்ந்த பெரியவர்களாக வளர்ப்பதற்கு மிகச் சிறந்த உதவியாக இருப்பது குடும்பமே. ஒரு குடும்பம் தம் பிள்ளைகளால் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதுதான் இலட்சியக் குடும்பம் எனப்படும். பிள்ளைகளை எவ்வளவு அவதானமாக வளர்க்கிறோமோ அவ்வளவுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகிழ்ச்சியான குடும்பம் பத்திரமும், பாதுகாப்பும் அளிக்கும் புகலிடமாய் உள்ளது. பிள்ளைக்கு கஸ்டம் ஏற்படும் வேளை பெற்றோர் பக்கத்திலிருந்து அக்கறையுடனும், அன்புடனும், பொறுப்புடனும் பார்த்துக் கொள்வார்களாயின், பிள்ளை தன் பெற்றோரின் அன்பை புரிந்துகொள்ளும். இது குடும்ப மகிழ்ச்சிக்கு வழிகோலும். இவற்றை தவற விட்ட பெற்றோரால் குடும்ப மகிழ்ச்சி சிதைவடைந்துள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உணவு உண்ணும் வேளைகளில் பிள்ளைகளுடன் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாகக் கலந்து பேசிக்கொள்ள வேண்டும். இதன் வளர்ச்சிப் படிநிலையாக பிள்ளைக்கு ஏதும் பிரச்சினைகள் தோன்றின் அவற்றை தாயிடமோ அல்லது தந்தையிடமோ சொல்லி புத்திமதிகளையும், ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும். வெளி உலகம் எவ்வளவு துன்பம் நிறைந்ததாக இருந்தாலும் பிள்ளை பாதுகாப்பைப் பெற இவை உதவியாக இருக்கும். அதிக அறிவுரைகள், கடுமையான எச்சரிக்கைகள், பிள்ளைகளுக்கு அதிகம் பிடிக்காது. உன்னத நட்பின் மூலம்தான் சாதிக்க முடியும். நட்புடன் அணுகுவதன்மூலம் அவை நல்ல ஆலோசனையாக எடுத்துக்கொள்ளப்படும். எதிர்ப்புகளையும் அதிகம், அளவுக்குமீறிக் காட்டக்கூடாது. கேட்பதற்கெல்லாம் குறை சொல்வதுகூட தவிர்க்கப்பட வேண்டும். அது தேவையற்ற சந்தேகங்களை மனதில் தோற்றுவிக்கும். இதன் விளைவாக பெற்றோரில் வெறுப்பு ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் அடுத்த பிள்ளைகளுடன் உங்கள் பிள்ளையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.

பெற்றோர் பிள்ளைகளுடன் பொழுதைக் கழிக்கும்போது அறிவுப் பசிக்கும் உணவளிப்பவர்களாக இருக்க வேண்டும். வேலைக்குச் செல்லும் பெற்றோரில் பெரும்பாலனோர் தமது பிள்ளைகளை தம் பெற்றோரிடமும், சிலர் பராமரிப்பாளரிடமும் விட்டுச் செல்கின்றனர். இச் சந்தர்ப்பங்களில் சில பிள்ளைகளின் உளவியல் தேவைகள் சரியான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தாது விடுவதும் பிள்ளையின் உள விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பிள்ளை எப்போதும் பெற்றோரின் மனநிலைக்கு வரவேண்டும் என நினைத்து செயற்படுதல், அவர்களுக்கு பிடித்த விடயங்கள் பற்றி அவர்களுடன் பேசாதிருத்தல், அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாமை, எப்போதும் படிப்பைப் பற்றியே பேசிக்கொண்டிருத்தல், பிள்ளை விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல், பிள்ளை தவறு செய்தால் அந்தத் தவறை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாதிருத்தல் இவை பிள்ளையின் மகிழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தி குடும்ப மகிழ்ச்சியில் தளம்பலை ஏற்படுத்துகின்றது.



பொருத்தமற்ற கட்டுப்பாடுகள், தவறான தண்டனை வழங்கல், கல்வித் திணிப்புக்கள், மற்றும் உளநெருக்கீடுகளுக்கு உள்ளாகாத வகையில் பெற்றோர் தம் பார்வையை செலுத்த வேண்டும். எதிர்கால விடியல்களே வரலாற்று ஏட்டில் இணைகின்ற புது வரிகள் குழந்தைகளே. புதுமைகளை பூமியில் படைக்கும் வண்ணம் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பில் பெற்றோர் அவதானம் மிக முக்கியம். பிள்ளைகளின் நடத்தைகளை நேராக்குங்கள். அது விழுமியங்களை ஒழுங்காக்கி, வாழ்க்கை இலக்கை நேர்த்தியாக்கும். பிள்ளைகளின் மனநிலை அறிந்து பக்குவமாகப் பேசவேண்டும். பெற்றோர், பிள்ளைகள் மனம்விட்டுப் பேசும் பழக்கம் குடும்பத்தில் நிலவ வேண்டும். அது குடும்ப உறவைப் பலப்படுத்தி, பிள்ளை வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பாக அமையும்.

பிள்ளையை நன்கு அவதானித்து வளர்க்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை இருக்கிறது. அதனை அடையாளம் கண்டு அதில் பிள்ளை தன் ஆற்றலைக் காட்ட பெற்றோர் உதவ வேண்டும். மனிதநேயம், இரக்க சிந்தனை, சமூக சேவை, உதவும் எண்ணம் போன்ற புதிய பகுத்தறிவுவாதச் சிந்தனைகள் முன்னெடுக்கப்பட பெற்றோர் வழி காட்ட வேண்டும். பிள்ளைகளின் தவறான நட்பை ஆரம்பத்திலேயே துண்டித்துவிடப் பெற்றோர் அக்கறையாக இருக்க வேண்டும். இல்லையேல் நேர் நடத்தையிலிருந்து பிள்ளை விலகிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். நல்ல விடயங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊக்குவிப்பு நம்பிக்கையை அதிகரிக்க உதவும். நம்பிக்கையே வாழ்வின் ஊன்று கோல். திரை மறைவில் எதையும் செய்யலாம் அது வெளிச்சத்துக்கு வராது என்ற மன நிலையிலிருந்து பிள்ளைக்கு விலக்களிக்க வேண்டும். ஒழுக்கம் என்பது தனக்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நன்கு புரிந்து நடக்க வழிகோல வேண்டும். அத்துடன் உலக மயமாக்கலின் விளைவுகள் எமது ஊர் வரை வந்து எம்மைத் தொலைத்துவிட முயற்சி எடுக்கின்றன. பிள்ளைகள் தம் நன்னடத்தைகளிலிருந்து வாழ வேண்டும். அதற்கு ஈடுகொடுத்து வெற்றி காண பெற்றோரின் பங்கு முக்கியமானதாகும்.

இன்று பிள்ளைகளை வளர்த்து பெரியவர்களாக்குவது மிகவும் கடினமான, பொறுப்புள்ள வேலையாய் இருக்கிறது. ஒரு பகுதியினர் அதை வெற்றிகரமாக நிறைவேற்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். பகுத்துணர்வு, உண்மைப் பற்றுறுதி, மரியாதை, சட்டங்களை மதித்தல், அன்பு பாராட்டுதல், தீயவற்றை வெறுத்தல், இப்படியான பண்புகளை தங்கள் பிள்ளைகளுக்குப் பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப காலம்முதலே வளர்த்துக் கொள்வதற்கு பெற்றோர் உதவ வேண்டும். அக்கறையற்ற பெற்றோரின் பிள்ளைகள், இன்று தம்மில் தாமே அக்கறையற்று வாழ்வை வீணடிக்கின்றனர்.

பெற்றோர் எல்லா விடயங்களிலும் முன்மாதிரிகளாகவும், நண்பர்களாகவும், கருத்துப் பரிமாற்றம் செய்பவர்களாகவும், போதனையாளர்களாகவும் இருக்க வேண்டும். பெற்றோர் தேவையானபோது உதவி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார் என்பதையும், எதுவாயினும் புரிந்து கொள்ளும் திறன் உள்ளவர்கள் என்பதையும் பிள்ளை அறியும்வண்ணம் பெற்றோரின் நடத்தைகள் காணப்பட வேண்டும். பெற்றோரே நீங்கள் பிள்ளைகளாய் இருந்த காலத்தை சற்று நினைவு படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் நடத்தையின்மூலம் சரியான நியமங்களைப் பிள்ளை கற்றுக்கொள்கின்றது என்பதை சிந்தித்து நகருங்கள். எதுவாயினும் வேறு எவரிடமிருந்தாயினும் கற்றுக்கொள்ளமுன் உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையாயின் பிறரிடமிருந்து தவறான தகவல்களை, நடத்தைக் கோலங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம். பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் சமநிலை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். இல்லையேல் பெற்றோர் தம் நிலை இழக்க நேரிடும். இழந்தவர்கள் பலர் உள்ளனர்.

கோப உணர்வைத் தவிர்த்து, தீய வார்த்தைப் பிரயோகங்களை விலக்குவது சிறப்பு. பிள்ளைகள் தன்னம்பிக்கையை இழந்துவிடும் அளவுக்குக் கண்டிப்பாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். தண்டிப்பு வேண்டாம். அன்பாக அக்கறையுடன் நடவுங்கள். உங்களுக்கு அவர்கள் மீது அன்பு உள்ளதென்பதை பிள்ளைகள் உணர்ந்தால் அவர்கள் அந்த அன்பை உங்கள்மீது திரும்பக் காண்பிப்பதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது. இது முதுமைக்கும் உதவும். தெய்வீக நியமங்களுக்குக் கீழ்ப்படிவதே சிறந்த வாழ்க்கை முறைக்கு அடிப்படை என்பதை சிறு வயதுமுதலே ஊட்ட வேண்டும். உங்கள் பிள்ளை அதனை அறிய வாய்ப்பளிக்க வேண்டும். செய்யக் கூடாத விடயங்களை செய்ய முனையும்போது இதனை செய்யக் கூடாது என்பதனை சாந்தமாகவும், நியாயமான முறையிலும் சொல்ல முயற்சி செய்ய வேண்டும். இளம் வயதுமுதலே அவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்திச் சென்றால் அந்த நடைபாதை முதிர்வு வரை செல்லும். பெற்றோர் தம் தள்ளாத வயதிலும் பிள்ளை பற்றி சிந்திக்காது இருக்கலாம். அத்துடன் அவர்கள் நீங்கள் பெருமைப்படத்தக்க பெரியவர்களாக வளருவர். சரியான வழியில் வழிநடத்தத் தவறிய பெற்றோர் இன்று படும்பாடோ பெரும்பாடு.

அனுபவமில்லாத பிள்ளைகளைத்தான் தாங்கள் கையாளுகின்றனர் என்பதை பெற்றோர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பிள்ளையின் நடத்தை தவறுமாயின் ஏன் அந்த நடத்தை தவறு என்பதையும், மீண்டும் அந்தத் தவறு ஏற்படுவதை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதையும் விளக்குவதன்மூலம் தவறான நடத்தையே கெட்டது, நான் கெட்டவன் இல்லை என உணர்ந்துகொள்ள அது வாய்ப்பளிக்கும். கீழ்ப்படியாத பிள்ளையாயின் அதைக் கீழ்ப்படிய, அதன் போக்கை மாற்றிக்கொள்ள உற்சாகப்படுத்துங்கள். புத்தி கூறுங்கள். உங்கள் பிள்ளை கோபப்பட்டு வீட்டைவிட்டு வெளிச்செல்லும் அளவுக்கு முரண்டு பிடிக்காதீர்கள். பிள்ளை செல்லுமாயின் உங்களிடம் திரும்பி வருவதை கடினமாக்கும் காரியங்களைச் செய்யாதீர்கள். கட்டுப்பாடில்லாத கோபத்தையும், கசப்பையும் தவிருங்கள். நியாயமான நடத்தை வரம்புகளை தொடர்ந்து காத்துவரும் பெற்றோரின் குடும்பமே பிள்ளைகளால் மகிழ்ச்சியான குடும்பமாக மிளிர்கின்றன. மற்றைய குடும்பங்கள் பிள்ளைகளால் மங்கிப்போயின. நாம் வாழும் வீடே அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும் தளமாக அமைகிறது. பெற்றோர் தாம் கெடாத தன்மையோடு, பெற்றோர் என்ற சொல்லுக்கு ஏற்ற தகுதியோடு வாழ வேண்டும். பெற்றோராக எமது பொறுப்பை நாம் எப்போது மறக்கிறோமோ, வழிகாட்டலை எப்போது கைவிடுகிறோமோ அப்போதுமுதல் பிள்ளையிடம் தொடங்குகிறது வன்மமும், வன்முறையும். இதன் வலியை அனுபவிக்கும் பெற்றோரும் உள்ளனர். பெற்றோரின் கடுமையான எச்சரிக்கைகள் தோல்வியில்தான் முடியும். வாழ்வில் உள்ள பொறுப்புக்களை உணர்த்தி வளர்த்தெடுக்க வேண்டும். இவற்றில் இருந்து பெற்றோர் தவறும் பட்சத்தில் சமூகத்தின் இழி சொற்களுக்கு பெற்றோரும், பிள்ளைகளும் ஆளாகி குடும்ப மகிழ்ச்சியை தொலைத்தவர்களாக கருதப்படுவர். வாழ்வில் பிள்ளைகளால் குடும்பத்துக்கு மகிழ்ச்சி கிடைக்க வேண்டுமானால் குடும்பம் தம் பொறுப்பு உணர்ந்து நடக்க வேண்டும். குடும்பத்தின் செயற்பாடுகள் நேர்த்தியாக இருந்தால்தான் பிள்ளைகளால் குடும்பம் மகிழ்ச்சியில் நீந்தலாம்.

# New Commercial Units for Sale

## (Markham & Finch)

## 2225 Markham Road - Scarborough



## FEATURES :-

- Brand New Medical & Professional Building
- Ample Surface Parking
- Close to all Amenities
- Available Immediately

| Size | Asking Price |
|---|---|
| 482 sf | $295,000 |
| 482 sf | $295,000 |
| 1548 SF | $ 929,000 |

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.














# $O_2$ - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

ஜுன் 2022இல் வெளிவந்த இப்படத்தில் நயன்தாரா பிரதம கதாபாத்திரமாக நடித்துள்ளார்.

தனது கணவனின் மறைவிற்குப் பின்னர் பார்வதி (நயன்தாரா) தனது மகன் வீராவுடன் வாழ்ந்து வருகிறார். பார்வதி ஓர் உயிரியல் பேராசிரியர். அவரது மகனுக்கு நுரையீரலில் பாதிப்பு ஏற்படுத்தும் Cystic Fibrosis நோய் இருப்பதால் ஓர் ஒக்ஸிஜன் உருளையின்



மூலம் மூச்சு விடுகிறார்.

ஒரு நாள் வீராவிற்கு மேலதிக சிகிச்சைக்காக கொச்சின் நகருக்கு செல்ல வாய்ப்புக் கிடைக்கிறது. அந்நாளில் அதிகமாக மழை பெய்து கொண்டிருந்தபடியினால் பார்வதியும் வீராவும் தாங்கள் வாழும் கோயம்புத்தூரிலிருந்து மருத்துவமனைக்குப் பேருந்தில் செல்கின்றனர்.

காடழிப்பு ஏற்பட்ட பகுதி ஒன்றினால் அவர்களது பேருந்து செல்லும்போது மழையினால் மண்சரிவு ஏற்படுகிறது. இதனால் பார்வதி, வீரா மற்றும் சில பயணிகளும் அவர்களது பேருந்துடன் சேர்ந்து மண்ணுள் மூடப்படுகின்றனர்.

வெளியுலகத்திற்கு அவர்களது நிலை தெரியவருமா? இல்லாவிட்டால் மூச்சுவிட முடியாமல் அனைவரும் இறப்பார்களா? வீராவின் ஒக்ஸிஜன் உருளைக்கு ஆசைப்பட்டுப் பிற பயணிகளால் அவருக்குப் பிரச்சனை வருமா? என்ற கேள்விகளுக்குப் பதிலை படத்தைப் பார்த்து அறியுங்கள்.

கதாநாயகன் இல்லாமல் தனிக் கதாநாயகியாக நயன்தாரா நடித்துள்ள படங்களில் இதுவும் ஒன்று. அவரும் மகனைக் காக்க எதையும் செய்யத் துணியும் தாயாக நன்றாக நடித்துள்ளார். தனிப் பெண்ணாகத் தன்னைக் காயப்படுத்த நினைப்பவர்களிடம் இருந்து தன்னைக் காப்பாற்றுபவராகத் திறமையாக நடித்துள்ளார். வீராவாக You Tubeஇல் பிரபலமான சிறுவனான ரித்விக் நடித்துள்ளார். அவரது நடிப்பும் நன்றாக இருக்கிறது.

இப்படத்தின் முக்கிய கருப்பொருளாக மரங்களும் சூழல் மாற்றமும் இருக்கிறது. இதை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் இயக்குனர் சில காட்சிகளிலும் வசனங்களிலும் காட்டுகிறார். அதிக காடழிப்பால் மண்சரிவு நடைபெற்றது என ஒருவர் கூறுகிறார்.

பயணிகள் ஒக்ஸிஜன் இல்லாமல் தவிப்பது நாம் மரங்களை வெட்டுவதாலும் சூழலை மாசுபடுத்துவதாலும் உலகிற்கு ஏற்படக்கூடிய நிலைக்கு ஓர் உதாரணமாக அமைகிறது.

இயற்கையை அழிக்கும் மனிதர்களை இயற்கை அழிக்கும் என்பதற்கு உதாரணங்களுடன் உயிரியல் பேராசிரியர் தனது மாணவர்களுக்கு விளக்குவதுடன் படம் தொடங்குகிறது.

எனவே படத்தின் பிற்பகுதியில் ஒரு மரத்தின் செயல் முக்கியமான பங்கு வகிப்பதால் அது உண்மையாக நடக்குமோ என்று யோசிப்பதைவிட இயக்குனரின் நோக்கத்திற்கு அது பொருந்துகிறது எனலாம்.

உயிரியல் பேராசிரியர் பாடம் எடுக்காமலேயே இயற்கையை காப்பாற்றினால் அது நம்மைக் காப்பாற்றும் எனப் பார்வையாளர்களுக்கு விளக்குகிறார் இயக்குனர்.

இக்கருத்துகளுக்காகவும் கதாநாயகியின் திறமையான நடிப்பிற்காகவும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.



# பிள்ளையார்



வட்டமும் வரியும் தொட்டதே லிங்கம்
எல்லா ஒலியும் செல்லா நின்றாய்
ஒலியின் முதன்மை நாதம் 'ஓ' வே
யானை முகமும் ஓங்கா ரவடிவமே

ஆன்றோர் சான்றோர் வடிவு அமைத்தே
பிள்ளையார் என்று பெயரும் சூட்டினார்
மூன்று கண்ணனின் மூத்த புதல்வன்
எந்த உலகிலும் முதன்மை உனக்கே

கணங்களை ஆளும் கணபதி நீயே
வினைகளை அறுக்கும் விக்கினப் பொருளே
வானமும் வையமும் வணங்கிடும் தேவே
வழிபடும் அடியார் வாழ அருள்வாய்

உன்னைத் தொழுபவர் காணா பத்தியர்
உமையவள் விரும்பும் உவர்ந்த மைந்தன்
அசுரரை மாய்த்து அருளும் அளித்தாய்
மூஷிக வாகன மூர்த்தி ஆனாய்

மும்மலம் நீக்கி முந்தியும் கொடுப்பாய்
அழகன் முருகனின் அருமை அண்ணன்
இனிமைத் தமிழை அன்புடன் தருவீர்
நாடுகள் முழுவதும் நற்பணி புரியவே.

- கந்த- ஸ்ரீபஞ்சநாதன்